833

தி 6.] 1927௵ அக்டோபர்மீ 1௳ [பகுதி 9.

# மனமோகினி.

ஆசிரியோர்
ஆரணி. குப்புசாமிமுதலியார்



OFFICE OF THE ... OF BOOKS
No.
1 NOV 1927
MADRAS

பிரசுரகர்த்தர்
முனிசாமி முதலியார்,
னந்த நிலயம், சென்னை.

# மோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களை வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆ பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று 1927ஆ ஜனவரிமீ த்திலிருந்து கற்பகச்சோலையின் அற்புதக் கோலை என்ற நாவல் தொடங்கப்பட்டு சென்ற ஏப்ரல் மாதத்தோடு முடிவுபெற்றிருக்கிறது. பிறகு கடற்கொள்ளைக்காரன் என்ற நாவல் ஆரம்பமாகி முதல்பாகம் முடிவுபெற்று இப்பொழுது 2-ம் பாகம் நடந்து வருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. 1927-ம் வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு 1927ஆ ஜனவரிமீ த்தில் தொடங்கப்பட்ட "கற்பகச்சோலையின் அற்புதக் கோலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காததலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணா சேர்த்து ரூ.2—12—0 அனுப்பிவிட்டால் அந்தச் சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். 1928ஆ ஜனவரிமீ வரை வெளிவரும் மற்ற நாவல் சஞ்சிகைகளும் அனுப்பப்படும். இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்...

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பா...

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்

அர்ஜுனஸிங், சுந்தர்

அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின்

கற்பகச்சோலையின் அற்புதக்கோலை

கடற் கொள்ளைக்காரன் 1-ம் பாகம்

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்...

அம்மொழிகளைக் கேட்டதே அம்மாது உண்மை யுணர்ந்துகொண்டாள். துப்பறிபவர்கள் சங்கதியவளுக்கு நன்ருகத் தெரியும். ஆகையால் அவள் புத்தி யுக்திகளுக் கெட்டியவரையில் அவனுக்கு உதவிசெய்யத் தொடங்கினாள். அவ்வீடு முழுமையும் அவன் இஷ்டப்படி யுபயோகிக்க ஒப்புக்கொண்டாள். யாவற்றினும் முக்கியமான விஷயம் இச்சங்கதியை யடியோடு மிக்க இரகசியமாக வைத்திருப்பதாய் ஒப்புக்கொண்டாள். அப்படிக்கின்றேல் அவன் சங்கதியொன்றுமே முடியாது.

கடைசியில் அதேதினம் மாலையே ஜெயஸிங் புதிதாக அந்த வீட்டில் ஒரு அறை வாடகைக்கு எடுத்தவன்போல் மேல்மாடியில் அக்கள்ளர் இருக்கும் அறைக்குப் பக்கத் தறையில் போய்ச்சேர்ந்தான். ஜெயஸிங்குக்கு ஒரு சித்திரக்காரன் சிநேகமாக விருந்தான். அவன் அன்னியநாட்டான். க்ஷயரோக முடையவன். இப்போது ஜெயஸிங் அந்த நண்பனைப்போல் மாறுவேட மணிந்துகொண்டான். தன்னால் கூடியவரையில் அவனுடைய நடையுடை பாவனைகளை யப்படியே அபிநயிக்கத்தொடங்கினான். இவன் அந்த நண்பனைக் கடைசியாகக்கண்டபோது அவன் வியாதியால் நலிவுற்று மனமுடைந் திருந்தான். இவன் அப்படியே நடிக்கத் தொடங்கினான்.

ஜெயஸிங் அந்த அறைக்குச் சென்று சுமார் அரை மணி நேரங்கழித்துப் பக்கத்தறையில் இருவர் மெதுவாய்ச் சம்பாஷிக்கும் சத்தம் கேட்டது. அவர்கள் ஒரு ஆடவனும் ஒரு ஸ்திரீயுமென்று தெரிந்தது. ஸ்திரீயின் குரலால் அவள் வாலிப வயதுடையவ ளென்றும் நாணயமான மிருதுபாஷிணி யென்றும் தெரிந்தது. ஆனால் ஆடவன் முரட்டுத்தனமுடைய மூர்க்கன் என்றும் அவனிடம்

186519

அப்பெண் மிக்க அச்சத்தோடு நடந்து கொள்கிறாளென்றும் தெரிந்தது. இப்போது ஜெயஸிங்குக்கு அந்த ஆடவன் தந்தையென்றும் அப்பெண் புதல்வி என்றும் விளங்கியதோடு கள்ளரில் மூத்தவனே யிப்போது அடுத்த அறையிலிருக்கிறானென்றும் ஐயமறத்தெரிந்தது.

ஜெயஸிங் இனி அப்பெண்ணை நாம் எந்தத் தந்திரத்தால் காணலாம்; எப்படியவளிடம் தனியாய் இரண்டொரு வார்த்தைகள் பேசலாம் என்று சிந்தித்துக் கொண்டேயிருக்கையில் படிகளின் வழியாய் யாரோ மேலேறிவரும் சத்தம் கேட்டதும் கவனமாய் உற்றுக்கேட்டான். இரண்டொரு நிமிடங்களில் வந்தவன் முரட்டுத்தனமாகவே நடந்துவந்து பக்கத்தறையின் கதவை மெதுவாக மூன்று முறை தட்டினான். உடனே அந்த அறையின் கதவு திறக்கப்பட்டு உடனே மூடப்பட்டது. ஜெயஸிங் எவனைப்போல் அபிநயம் செய்கிறானோ அந்த நண்பன் இருமல் வியாதியுடையவன். ஜெயஸிங்குக்குத் தங்கள் அறைக்குப் பக்கத்தறையில் யாரோ ஒரு ஆள் இருக்கிறான் என்று அங்குள்ளவர்கள் அறியவேண்டும் என்பதுகருத்து. ஆகையால் அவன் அடிக்கடி கடினமாக இருமத் தொடங்கினான். அவர்களுக்கு அது பிரியமிருந்தாலு மிராவிட்டாலும் அவனுக்கு அவசியமில்லை.

ஜெயஸிங் இரண்டு மூன்று முறை இருமியதே பக்கத்தறையின் கதவுபட்டென்று திறக்கப்பட்டதும் ஒருவன் முரட்டுத்தனமான குரலாய், "யார் இங்கே இப்படிச் சத்தம்போடுவது? நீ சீக்கிரத்தில் இந்த அனாசாரமான சத்தத்தை நிறுத்திவிடா விட்டால்—" என்றான்.

அதற்குள் மிருதுவான குரலாய் ஒருவர், அவனைத் தடுத்து, "நான்போய் அதைப்பற்றி பார்க்கிறேன்" என்று கூறியது ஜெயஸிங் செவியில் வீழ்ந்தது. அம்மிருது

வான குரல் இராஜாமணியின் குரலாகவே யிருக்கவேண்டு மென்று ஜெயஸிங் தெரிந்து கொண்டான். மறுவிநாடி அடுத்த அறையிலிருந்து அவள் வரும்போது உடையின் சத்தம்கேட்டது. உடனே அவன் அறையினருகில் யாரோ வந்ததுபோல் தெரிந்தது. அதற்குள் இராஜாமணியே அறைக்குள் வந்தாள்.

ஜெயஸிங் மேஜையெதிரில் உட்கார்ந்துகொண்டு தன் வேலையைச் செய்துகொண் டிருந்தான். இராஜாமணி அவன் எதிரில் வந்துநின்றாள். ஜெயஸிங்குக்கு நேராக அவள் முகத்தை யுற்றுநோக்க அச்சமாக விருந்தது. அச் சமயம் அவனுக்கு மிக்க விசேஷமானது—இப்போது நடக் கப்போகும் விஷயத்தால்தான் தன் காரியம் ஜெயமடை வதும் அபஜயமடைவதும் அவனுக்குத் தெரியவேண்டும்.

இராஜாம்பாள் அவனைநோக்கி "நீர் மிக்க கடுமை யான இரும்பலால் தொந்தரைப் படுகிறீர்போல் தெரி கிறது" என்று தன் இயற்கையான அன்பார்ந்த இரக்க முடைய மாதிரியாய்க்கூறி, "இதற்குப் பரிகாரம் ஒன்று மில்லையா?" என்றாள்.

ஜெயசிங் தன்னெதிரிலிருந்த கடிதங்கள் முதலிய வற்றை யெல்லாம் ஒருபுறம் தள்ளிவிட்டு நிமிர்ந்து நோக் கித் தலையசைத்து "இல்லை. ஆனால் எப்போதுமே இப்படி அதிக தொந்தரவாக இருப்பதில்லை. நான் உனக்குத் தொந்தரை கொடுத்ததாக இருந்தால் மிக்க விசனமடை கிறேன். என்னை மன்னிக்கவேண்டும்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே இராஜாமணி தன்சிரசில் நெருக்கமாகப் போர்த்தியிருந்த சால்வையை விலக்கி விட்டு, சாந்தமான நடையாய் அவனருகில் சென்று இரக் கத்தோடு, "நீர் எனக்குத் தொந்தரை கொடுக்கவில்லை. ஆனால் என் தந்தை யப்படிக் கருதுகிறார். அவர் சில

சமயங்களில் சிடுசிடுப்பாய் நடந்து கொள்பவர். ஆகை யால் ஒவ்வொரு சமயத்தில் சற்று முரட்டுதனமாகப் பேசினுல் நீர் அதைக் கவனிக்கலாகாதென்று வேண்டிக் கொள்கிறேன்" என்ருள்.

மாதர்கள் தங்கள் விஷயத்தில் ஆடவர்க்குப் பிரிய முண்டாகச் செய்வதில் பல விஷயங்களிருக்கின்றன. மாதர்களின் பார்வையாலும், குரலாலும், பேசும் இனிய மொழிகளாலும் ஆடவர்கள் அவர்கள்மேல் பிரியமும் இரக்கமும் கொள்கிருர்கள். மாதர்களின் அழகைவிட இத்தகைய விஷயங்கள் ஆடவரைச் சுலபமாக வசப் படுத்தி விடுகின்றன. இராஜாமணி பேசிய இரக்கமான மாதிரியால் ஜெயசிங்குக்கு அவள் தான் இது காறும் காணுத ரூபலாவணியமுடைய ஒரு கன்னிகைபோல் தோன்றினுள். ஜெய்சிங் அவளை நோக்கி "அம்மா! நீ என் விஷயத்தில் மிக்க அன்பு காட்டுகிருய். மிக்க இரக்கத் தோடு நடந்து கொள்கிருய். உன் அன்பார்ந்த நடக்கை என் மனதில் உறுத்துகிறது" என்ருன்.

அத்தகைய மாதினிடம் தான் தன் நிஜ உருவை மறைத்து மாறுவேடத்தோடு நடிப்பது அவனுக்கு மிக்க நாணமாக விருந்தது. அச்சமயம் பக்கத்தறையி லிருந்து யாரோ கோபத்தோடு உறுமும் சத்தம் கேட்டதும் ஜெய சிங் அவர்கள் கோபத்திற்கு ஆளாகாமல் சீக்கிரம் போய் விடும்படி இராஜாமணிக்குக் கூறினுன்.

இராஜாமணி "இதோ ஒரு விநாடியிற் போய்விடு கிறேன். நீர் இங்கு என்ன செய்கிறீர்? அதைத் தயை செய்து கூறும்" என்ருள். அதன்மேல் ஜெயசிங் தன் விஷ யத்தைப்பற்றி யெவ்வளவு கூறவேண்டுமோ அவ்வளவு வரையில் கூறி தான் அபிநயம் செய்யும் விஷயத்தைப் பற்றியும், அதைப்பற்றி யவள் தன் தந்தை முதலியவர்

களுக்கு எவ்வாறு கூறவேண்டு மென்பதைப் பற்றியும் கூறினன். அவள் மிக்க கனிவோடு யாவும் கேட்டுக் கொண்டாள். அவள் கண்களில் நீர் துளித்தது. கடைசி யில் அவள் அவனை நோக்கி,

"நான் இப்போது கூறுவது தங்கள் மனதில் நன் ருய்க் கவனமிருக்கட்டும். என் தந்தையும் தமையனும் ஏதேனும் முரட்டுத் தனமாகப் பேசினல் தாங்கள் அதைச் சட்டைசெய்யலாகாது. அவர்கள் தங்களுக்குள்ளாகவே சச்சரவிட்டுக் கொள்வார்கள். இரவிற்கே யந்த உண்மை தெரியும்'' என்ருள். சாதாரணமாய்த் துயரத்தால் வாடி யிருந்த அவள் முகத்தில் புன்னகை தோன்றியது. அவள் மொழிகளுக்குப் பதில் அவன் தலையசைத்தான். இச் செய்கை யவளைக் காப்பாற்றுவதாய் அவன் சத்தியம் செய்ததுபோ லிருந்தது.

---

## 18—வது அத்தியாயம்.

நடந்த விஷயங்களால் ஜெயசிங்கின் மனதிலிருந்த சந் தேகங்களெல்லாம் ஒழிந்தன. இனித் தன் காரி யத்தை யனுகூலமாக முடித்துக்கொள்வதற்கு வழி யேற் பட்டு விட்டதென்று அவன் மனம் திருப்தியடைந்தது. அவன் இரண்டொரு நாட்கள் வரையில் பேசாமலிருந் தான். ஏனெனில் அக்கள்ளர்கள் பொல்லாத முரட்டுக் குணமுடைய பரமதுஷ்டர்கள். அவர்களை மிக்க ஜாக் கிரதையாய்ப் பிடிக்கவேண்டும். கொஞ்சம் தவறினல் காரி யம் அடியோடு கெட்டுவிடும். ஆகையால் அவர்களைப் பிடிக்க முயலுமுன் அவர்களைப் பற்றிய விஷயங்களை யெல்லாம் பூரணமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென் பது அவன் கருத்து.

ஜெயசிங்கின் மனதில் இன்னும் இரண்டொரு விவகாரங்களிருக்கின்றன. முதலாவது அக்கள்ளர் சிறைச்சாலையி லிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவந்து விட்டவர்கள். அவர்களைப்பிடித்துக் கொடுத்தால் அதுவே கௌரவம். அதன்றித் தன் துப்பறியும் திறமையால் காணமற்போன பூபாலப் பிள்ளையின் மனைவியைக் கண்டுபிடிப்பது தனக்குப் பிரசித்தியளிக்கும் விஷயமாகும். ஆனல் அவளைக் கண்டுபிடிப்பதோடு அவள் தந்தையும் தமையனுமாகிய இரண்டு கள்ளரையும் சிறைசெய்ய வேண்டும். ஆனல் இச்சங்கதிகள் பகிரங்கமாய் விட்டால் பூபாலப் பிள்ளைக்கு மானக்கேட்டை விளைவிக்கும். ஆகையால் அது பகிரங்கமாகவும் கூடாது, காரியமும் நிறைவேற வேண்டும். இதனல் அக்கள்ளரைப் பகிரங்கமாகச் சிறைசெய்யலாகாது. ஆனல் சிறைசெய்யாமலும் முடியாது. அதாவது இரகசியமாகவே காரியம் நடைபெறவேண்டும். அவர்களோ பலம்பொருந்திய ஆட்கள். அதோடு சரியான ஆயுதங்களை யெப்போதும் ஆயத்தமாக வைத்துக்கொண்டிருப்பார்கள். விவகாரம் இப்படி யிருப்பதால், பலத்தை விடத் தந்திர சாமார்த்தியமே இப்போது உபயோகப்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செய்யவேண்டுமாயின் அதிற் சம்பந்தப்பட்ட ஆசாமிகள் விஷயங்கள் யாவற்றைப் பற்றியும் நன்முக அறிந்துகொள்ள வேண்டும். ஆகையால் ஜெயசிங் மூன்று நாட்கள் இவற்றைப் பற்றிய சங்கதிகளை யறிவதிலேயே தன் காலத்தைக் கழித்தான். கடைசியில் கீழ்க்கண்ட விஷயங்களை யறிந்தான்:—

1-வது—அப்பெண் எப்போதும் தனியாக விடப்படுவதில்லை யென்றும், தகப்பனில்லா விட்டால் தமையன், இருவரில் ஒருவர் எப்போதும் அவள்மேல் காவலாக

விருக்கிறார்களென்பதும், அந்த வீட்டுக்காரி கூறியபடி யுண்மையே.

2-வது—ஆயினும் அச்சமயங்களில் சற்றுநேரம் மட்டும் அவள் கூடத்தில் உலவிக்கொண் டிருக்கும்படி விடப் படுகிறாள்.

3-வது—அவர்களிருக்கும் அறையின் கதவின்மேல் சிவப்புச்சுண்ணத்தால் போடப்படும் சிலுவைக்குறியால் ஏதோ விசேஷமிருக்கிறது. அது அவர்கள் அந்த அறையில் இருப்பதைப் பற்றிய விஷயத்தில் சம்பந்தப்பட்ட இரகசியக்குறி. எப்படியெனில் ஒரு காலத்தில் ஏதோ ஒரு காரணத்தால் அவர்கள் மூவரும் அறையை விட்டுச் சென்றபோது அக்குறி கலைக்கப்பட்டது. ஆனால் முன்னடி தந்தையும் மகளும் மட்டும் வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் அச்சிலுவைக் குறி யுடனே போடப்பட்டது.

4-வது—அவர்கள் ஏதேனும் சாமான்கள் வாங்க வேண்டியதாயின் தந்தையே சென்று வாங்குகிறானன்றி மகன்செல்வதில்லை. ஆனால் அவர்களுடைய மற்ற காரியங்களை யெல்லாம் செய்பவன் மகனேயன்றித் தந்தையல்ல. மகனுக்கு அனுகூலமானவேளை இரவுவந்ததே. தந்தைக்கோ நடுஇரவுதான் சௌகரியமான வேளை. ஆயினும் ஒவ்வொரு சமயம் மாலைவேளையில் தந்தை அவனுக்கு வேண்டிய இன்றியமையாத மதுபானத்திற்காக வெளியில் செல்வதுண்டு.

5-வது—அவர்கள் இருவரும் மிக்க பலசாலிகளே. ஆயினும் சுறுசுறுப் புடையவர்களல்ல. ஜெயசிங் ஒவ்வொரு சமயங்களில் மறைவிலிருந்து அவர்களை நோக்கிய போது அவர்கள் முதுகின் விசாலத்தைக் கண்டு மிக்க வியப்படைந்து விட்டான். அவர்களுடைய நடை மந்தமாயிருந்தது. அப்படிக்கின்றி நடையும் அதைப்போன்றே

புத்தியும் சுறுசுறுப்பா யிருந்திருந்தால் ஜெயசிங்கின் விவ காரங்களுக்குப் பிரதிகூலமாகவே யிருந்திருக்கும்.

இவ்விஷயங்களை யுணர்ந்தபின் இவற்றைக் கொண்டு அக்கள்ளரை யெப்படிப் பிடிக்கலாமென்று ஆலோசனை செய்ய வேண்டியதே அவனுடைய முக்கிய காரியமாய் விட்டது. ஒருநாள் நடுப்பகல் தான் செய்யவேண்டிய ஆலோசனைக ளனைத்தும் முற்றுப் பெற்றதாய் அவனுக் குப் புலப்பட்டது. ஆகவே தான் மூலஸ்தானமாகிய துப் பறியும் போலீஸ் இலாகாவின் காரியாலயத்திற்குச் சென்று வரவேண்டும். அவனுக்கோ இரண்டொருமணி நேரங்கூட அந்த விடத்தைவிட்டுச் செல்லப் பிரியமில்லை; ஆயினும் அங்குசென்றே தீரவேண்டும். பிறகே முடிவான விஷயங்கள் நடைபெற வேண்டும்.

ஆகையால் தான் இதுகாறும் அபிநயமாகச் செய்து கொண்டிருந்த சித்திரம்தீட்டும் வேலையில் சம்பந்தப்பட்ட வற்றை யெல்லாம் ஒருமூட்டையாகக் கட்டிவிட்டுப் புறப் பட ஆயத்தமானதும் வேணுமென்றே இரண்டு மூன்று முறை கெட்டியாய் இருமினான். உடனே அடுத்த அறையி லிருந்து ஒனாய்கள் உறுமுவதுபோல் இரண்டு ஆடவரும் முணமுணக்கும் சத்தம்கேட்டது. மறுகிமிடம் இராஜா மணி இரக்கமான குரலாகவும் குளிர்ச்சியான முகவிலா சத்தோடும் வெளியில் வந்து ஜெயசிங்கின் அறையில் நுழைந்து,

“ஆ! அய்யா! தாங்கள் இன்று இருமலால் அதிக மாகக் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. ஓ! வெளியில்செல் வதற்கு ஆயத்தப் படுகிறீர்கள்போல் காண்கிறதே........” என்றாள்.

அச்சமயம் பக்கத்தறையி லிருந்து “ஏ! வா இங்கே சீக்கிரம். என்ன, அந்தக்கிழப்பயல் சனியனை வெளியிட்ட

மாதிரி குலேக்கிறபோதெல்லாம் நீபோய் ஏதோ உபசாரம் செய்கிருயே, இதென்ன அர்த்தம்?" என்று முரட்டுத் தனமான வார்த்தைகள் வெளிக்கிளம்பின.

அக்கடு மொழிகளைக்கேட்ட இராஜாமணியின் முகத்தில் ஒருவித நகைதோன்றியது. அவள் ஜெயசிங்கை நோக்கி "என்தந்தை இப்போது தன் வெறிக்குணமான வேளையிலிருக்கிருர். நீர் க்ஷேமமாய்ப் போய்வாரும். கடவுள் தயவால் ஜெயத்தோடு திரும்பி வருவீர் என்றே நம்புகிறேன்," என்ருள்.

உடனே அடுத்த அறையிலிருந்து மதுபடி கடூரமான பின்வரும் மொழிகள் கிளம்பின:—

"என்ன சமாசாரம்? ஜெயமடைவதா? நீங்கள் இருவரும் என்னகதை செய்கிறீர்கள்? என்னதான் உங்கள் சங்கதி?" என்று மேகம் குமறுவதுபோல் கேட்டதோடு முரட்டுத்தனமாய் ஆட்கள் அந்த அறையிலிருந்து வருவதுபோன்ற சத்தம் கேட்டது.

இராஜாமணி ஜெயசிங்கை நோக்கி, கருணையான முகத்தோடு "போய்வாரும், தாங்கள் மிக்க பலஹீனமாயிருக்கிறதாகத்தெரிகிறது; அதோடு வயோதிகம். திரும்பி வந்தபின் தயவுசெய்து கொஞ்சம் மெதுவாக இரும்ப முயலுங்கள்" என்ருள்.

ஜெயசிங் "திரும்பி வரும்போது......" என்றதும் வாயைமூடிக்கொண்டான். ஏனெனில் அச்சமயம் இராஜாமணியின் தந்தை வாயிற்படியில் வந்து நின்று வெறிகொண்ட வேங்கைபோல் இவர்களை யுடனே விழுங்கப்போகிறமாதிரி நிற்பதைக்கண்டதும் அவன் அசைவற்று நின்றுவிட்டான். அந்த முரடன் "நீங்களிருவரும் என்னபேசிக்கொண் டிருக்கிறீர்கள்? அதென்ன மூட்டை?" என்று ஜெயசிங் கரத்திலிருந்த மூட்டையை நோக்கிக் கேட்டான்.

இராஜாமணி துரிதமாய் "இவர் செய்துகொண்டிருந்த சில விளையாட்டுக் கருவிகள். அவற்றை விற்க எடுத்துக்கொண்டு போகிறார்" என்றாள். அவள் தந்தை அனல் போன்றகண்களால் உருட்டிப் பார்த்துக்கொண்டே வேறொன்று மில்லையா என்றான். கன்னிகை "ஒன்றுமில்லை. என்வார்த்தையை நம்பலாம்" என்றாள்.

அவள் தந்தையாகிய முரடன் ஓநாய்போல் உறுமிக்கொண்டே "அப்படியிருந்தால் என்ன நடக்குமென்பது உனக்குத்தெரிந்ததே." என்று கூறிவிட்டு அவள்தோளைப் பற்றி அவளை யறைக்கு அழைத்துச்சென்றான். அம்மொழிகளைக் கேட்டதே அவள் தேகத்தில் ஒருவித நடுக்கமுண்டாகி, இரண்டொரு விநாடி அவள் ஸ்மரணை நீங்கியவள் போல் ஒன்றையும் நோக்காது நின்றாள். பரமதுஷ்டனும் முரடனுமான தந்தை அதைச் சட்டைசெய்யவே யில்லை.

ஜெயசிங் தான் அபிநயம் செய்வதற்குத் தக்கபடி மெதுவாகத் தள்ளாடிக் கொண்டே மெதுவாய்ப் படிகளின் வழியாயிறங்கிக் கீழ்க்கட்டிலுள்ள கூடத்திற்குச் சென்றான். அவன் நேராக வீட்டுக்காரியின் அறைக்குச் சென்று அவளைக்கண்டு "அம்மா! நான் வெளியில்செல்கிறேன். நான் வரும்வரையில் நீ இப் படிக்கட்டுகளில் உட்கார்ந்துகொண்டிருக்கவேண்டும். மேல் அறையில் ஏதேனும் குழப்பம் நடந்து அந்தப்பெண் சத்தமிட்டால் நீயுடனே தயைசெய்து அவளுக்கு உதவிசெய்யச் செல்லவேண்டும்; மறக்கவேண்டாம். அவசியமாயின் உதவிசெய்வதற்காக ஒரு போலீஸ்காரனை வீதியில் நம்வீட்டினெதிரில் மறைவா யிருக்கும்படி ஏற்பாடு செய்துவைத்திருக்கிறேன்." என்றான்.

அந்த நல்லமாது உடனே அப்படியே யாகட்டுமென்று தலையசைத்து, உடனே தான் பின்னல்வேலைசெய்

யும் சாமான்களடங்கிய கூடையை யெடுத்துக்கொண்டு "நல்லதிஷ்டமாய் படிகளின் உச்சியில் உட்கார்ந்தால் அங்கிருக்கும் ஒருசாளரத்தின்வழியாய் நான் அவர்கள் அறையில் நடக்கும் விஷயங்களைக் காணலாகும். தரும கைங்கரியத்திற்குக் கூட வீணுப்போக்க எனக்கு அவகாசமில்லை" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

ஜெயசிங் அவ்வளவு முன்சாக்கிரதையாய் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டுச் சென்றபோதிலும் திரும்பி வருந்தனிலும் அவன்மனம் பெருங்கலக்கத்தி லிருந்தது. அவன் வெளியில் சற்று ஆலசியமாகவே யிருக்கவேண்டியிருந்தது. ஏனெனில், முன்னே போலீஸ் பிரதம அதிகாரிக்கு நடந்த சங்கதிகளைக் கூறவேண்டும். பிறகு ஆனந்தசிங்கைக்கண்டு இக்கள்ளரை எப்படிப் பிடிக்கவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசனைசெய்து அவன் உதவியாலேயே அக்காரியம் நிறைவேற வேண்டும். இவற்றால் மிக்க ஆலசியமாகு மென்றே ஜெயசிங் கலக்கப் பட்டுகொண்டிருந்தான்.

ஆனால் ஜெயசிங் வெளியில் புறப்பட்டதும் முன்னே நேராய் ஆனந்தசிங்கின் வாசஸ்தலத்திற்குச் சென்றபோது ஆனந்தசிங் அச்சமயம் வீட்டிலிருப்பதைக் கண்டு மிக்க சந்தோஷமடைந்தான். அதோடு அச்சமயம் ஆனந்தசிங் மிக்க உற்சாகமான நிலைமையி லிருந்தான். ஜெயசிங் தான் கண்டுபிடித்த விஷயங்களையெல்லாம் அவனிடம் கூறினான்.

யாவும் கவனமாகக்கேட்ட ஆனந்தசிங் குளிர்ந்த பார்வையோடும் புன்னகையோடும், "இந்த விஷயத்தில் அதிஷ்டம் உனக்கு நல்ல உதவிசெய்ததென்று தோன்றுகிறது. நான் பூபாலப் பிள்ளையின் வீட்டிலிருந்து உன்னைப் பிரிந்து சென்றது முதல் இந்த விஷயத்தைப் பற்றி எனக்கு எள்ளளவு உளவும் அகப்படவில்லை.

ஆனால் பூபாலப் பிள்ளையை யின்று காலை நான் கண்டேன். இந்த விஷயத்தை மட்டும் நாம் திருப்திகரமாக முடித்து விட்டால் அவர் மிக்க நன்றியுள்ளவராக விருப்பார் என் பது மட்டும் நிச்சயம்" என்றான்.

ஜெயசிங்:—"அது நல்லதே. நமக்கு வேண்டியது நன்றி யறிதலே. அவருடைய மனைவி க்ஷேமமாய் என் பார்வையிலேதான் இருக்கிறாள் என்று அவருக்கு அறிவிக்க வேண்டியது நம்தொழில் முறைமைப்படி நமது கடமையேயென்று கருதுகிறேன். ஆனால் அவருடைய வாசஸ்தலத்திற்கு எவ்வளவு அரு காண்மையில் அவள் இருக்கிறாள் என்பதை யறிவிக்க வேண்டுமென்பது என் நோக்கமல்ல. ஏனெனில் ஒரு காதலனுக்குள்ள இயற்கையான குணத்தால் அவர் அவசரப்பட்டால் காரியமே படியோடு கெட்டு விடும். அவர் எப்போது நம்மோடு கலக்கவேண்டிய வேளை வருகிறதோ அப்போது யாவும் பகிரங்கமாய்க் கூறலாம் என்பது என் கருத்து. பிறகு உனது ஆலோசனை யெப்படியோ அப்படி செய்யலாம்" என்றான்.

அதற்குள் ஜெயசிங்கின் மனதில் இன்னொரு முக்கிய மான விஷயம் நினைவிற்கு வந்தது. அதாவது இராஜா மணி இவர்கள் விஷயத்தில் நம்பகம் வைத்து இவர்க ளோடு கலந்து நடந்துகொண்டால்தான் காரியம் அனு கூலமாகும். ஆகையால் அவன் ஆனந்தசிங்கை நோக்கி, "இவ்விஷயத்தில் இராஜாமணி நம்மோடு கலந்து வேலை செய்யவேண்டியிருக்கும். அவளுக்கு நம்மிடம் நம்பகம் உண்டாயிருக்கவேண்டும். ஆகையால் எதற்கும் தன் க்ஷேமத்திற்காக அவள் நம்மை நம்பி நமது ஏற்பாட்டின் படி நடக்கவேண்டுமென்று தங்கம்மாளிடமிருந்து அவ

ளுக்கொரு கடிதம் வாங்கி வந்தால் மிக்க நலமாக விருக்கும். பூபாலப் பிள்ளை யிப்போது தன் மனைவிமேல் பூரண அன்புவைத்திருக்கிறார் என்ற விஷயத்தில் அவள் நம்பிக்கை யுடையவளானதால் இவ்விஷயத்தில் கணவனும் மனைவியும் ஒன்று சேருவதற்காக அவள் தன்னாலான உதவியைச்செய்ய மறுக்கமாட்டாள். இப்படிச் செய்யாவிட்டால் அப்பெண் நம்மை நம்பி நாம் கூறுகிறபடி நடக்க மாட்டாள். அக்கடிதம் வேண்டுமாயின் கையொப்பமில்லாம விருக்கட்டும். அதில் எப்பெயர்களும் குறிக்கப்பட வேண்டாம். ஏனெனில் தற்செயலாய் அக்கடிதம் எதிரிகளிடம் சிக்கிவிட்டால் மோசமாக முடியும். ஆனால் கையெழுத்து மட்டும் தங்கம்மாள் கையெழுத்தாக விருக்க வேண்டும். அவள் கையெழுத்து இராஜாமணிக்கு நன்றாகத் தெரியும்'' என்றான்.

ஆனந்தசிங் மௌனமாகவே முழுமையும் செவியேற்றுச் சற்றுநேரம் சிந்தித்தான். ஜெயசிங் கூறிய முன் யோசனையான எச்சரிக்கைகள் யாவும் அவசியமே யென்று அவன் புத்திக்குப் புலப்பட்ட படியால் அவன் அவ்வாறே தங்கம்மாளிடம் ஒரு கடிதம் வாங்கி வருவதாய் ஒப்புக்கொண்டான். அவன் அவ்வளவு வரையில் ஆக்ஷேபமின்றி ஒப்புக்கொண்டதே ஜெயசிங்குக்கு மிக்க திருப்தியை யுண்டாக்கி விட்டது. அதன்மேல் அவன் இனி யக்கள்ளரை யெப்படிப் பிடிப்பதென்பதைப் பற்றித் தான் செய்திருக்கும் ஆலோசனைகளையெல்லாம் ஆனந்தசிங்கிடம் கூறினான். ஆனந்தசிங் முழுமையும் கேட்டு யாவும் தகுதியான ஆலோசனைகளே யென்று கூறி, அவற்றின்படி நடக்கச் சம்மதித்ததைக் கேட்டதே ஜெயசிங் மிக்க சந்தோஷமடைந்தான். முன்பு ஆனந்தசிங்கிடம் தான்

இழந்த மதிப்பு மறுபடி வந்து விட்டதென்று அவனுக்குத் திருப்தியுண்டாயிற்று.

ஆனந்தசிங் "நீ எப்படி ஏற்பாடு செய்திருக்கிறுயோ அதன்படியே நடக்கலாம். நமது ஆயுள் முழுமையும் நினைவிலிருக்கத்தக்க காரியம் நிறைவேறும். ஆனல் ஒரு விஷயம். நீ எதிர்பார்த்திராத சிக்கலான சங்கதி யிதில் ஏற்படும். ஒரே யொரு முறை தவிர எப்போதும் இத்தகைய விவகாரங்கள் சிக்கின்றி நடப்பதை நான் கண்டதே யில்லை" என்ருன்.

இதைக் கேட்டபோது ஜெயசிங் இதுகாறுமடைந்த சந்தோஷம் ஒருவாறு மங்கிவிட்டது. அவன் ஆனந்தசிங்கை நோக்கி "அன்று நீ பூரண ஜெயமடைந்தாய். இச்சமயம் நான் இவ்வளவுதூரம் கஷ்டப்பட்டுக் கடைசியில் அபஜெயமடைந்தால் என் மனந்தாளாது" என்ருன்.

ஆனந்தசிங்:—"நீ அபஜெயமடையமாட்டாய். இந்த விஷயத்தில் நீ பூரண ஜெயமடைய வேண்டுமென்று நான் தீர்மானித்துக்கொண் டிருக்கிறேன்" என்ருன்.

ஜெயசிங் ஆனந்தசிங் கூறிய வார்த்தைகளால் தைரியமடைந்து, அத் தைரியத்தோடு வீட்டிற்குச் சென்ருன். அப்போது வீட்டுக்காரி அவன் எங்கு உட்காரும்படி கூறிஞளே அங்கேயே யுட்கார்ந்துகொண் டிருந்தாள். ஜெயசிங் அவளை நோக்கி "மேல் அறையில் ஏதேனும் குழப்பம் நடந்ததோ?" என்று கேட்டான். அதற்கு அம்மாது "இல்லையில்லை. அங்கு எவ்விதக் குழப்பமு மில்லை. நீ சென்றதுமுதல் அங்கு எள்ளளவு சந்தடியுமில்லை" என்ருள். ஜெயசிங் அவளுக்குத் திருப்தியான பதிலளித்து விட்டுத் தன் அறைக்கு மெதுவாய்ச் சென்ருன்.

ஜெயசிங் தன்னலான வரையில் தன் காரியங்களை யெல்லாம் சரிவரச் செய்தாலும் இனி நடக்கவேண்டிய

காரியங்களில் மட்டும் மனக்கலக்கமேயிருக்கிறது. ஏனெனில் அக்கள்ளர் மிக்க துஷ்டர்கள். எதற்கும் அஞ்சாத பாதகர்கள். அதோடு எதிலும் சந்தேகங்கொண்டு மிக்க சாக்கிரதையாய் நடந்துகொண்டிருக்கிறார்களென்பதைப் பிரத்தியட்சமாய் அவன் கண்டிருக்கிறான். ஆயினும், ஆனந்தசிங்கிடம் கலந்து பேசியபின் அவனுக்குச் சற்று தைரியமே. ஆனந்தசிங் "நீ யிக்காரியத்தில் பூரண ஜெயமடையவேண்டுமென்பது என் தீர்மானம்" என்று கூறியதைக் கேட்டபின் அவன் மனதில் நாம் எப்படியும் ஜெயமடைவோம் என்ற தைரியமுண்டாயிற்று. அதோடு இடையில் இதில் ஏதோ சிக்கலான விஷயமிருக்கிறதென்றும், ஆனால் அவ்விஷயத்தில் ஆனந்தசிங் உதவி செய்வானென்றும் அவன் உணர்ந்தான். ஆயினும் அது என்னவென்று மட்டும் அவனுக்குத் தெரியாது. ஆனால் ஆனந்தசிங் எந்த விஷயத்தில் தைரியங் கூறினானோ அதைப் பூரணமாக நிறைவேற்றச் சக்தியில்லாமல் ஒரு போதும் கூறமாட்டான் என்று மட்டும் அவன் நன்கறிவான்.

---

## 19—வது அத்தியாயம்.

மறு நாட்காலை ஜெயசிங் படுக்கையை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு முன்னாள் ஆனந்தசிங்கிடம் கூறிவிட்டு வந்த விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே யிருக்கையில் வீட்டுக்காரி வந்து ஒரு கடிதத்தை யவனிடமளித்தாள். அது ஆனந்தசிங்கினிட மிருந்து வந்த கடிதம். அக்கடிதத்திற்குள் ஆனந்தசிங் முன்னாள் ஏற்பாட்டின்படி தங்கம்மாளிட மிருந்து வாங்கிய கடிதத்தை வைத்தனுப்பி யிருந்தான்.

வீட்டுக்காரி மிக்க இரகசியமான சமிக்கையோடு அக்

கடிதத்தை யவளிடமளித்தாள். அவள் இப்போதுதான் மர்மம் இரகசியம் யாவுமறிந்துகொண்டாள். ஜெயசிங் அக்கடிதத்தைப் பிரித்துப்பார்த்தான். அது மலைநாட்டுப் பாஷை. அவனுக்குச் சற்றும் புலப்படவில்லை. இராஜா மணிக்கு அப்பாஷை தெரியுமென்று தங்கம்மாள் அறிவாள். ஆயினும் எல்லாம்சரியாகவே யிருக்குமென்று எண்ணிக்கொண்டு இராஜாமணியைக்காண சந்தர்ப்பம்வாய்க்கு மட்டும் எதிர்பார்ப்பதென்றும் இன்றேல் ஏதேனும் தந்திரம்செய்து அவளைக்கண்டு அக்கடிதத்திலுள்ள விஷயத்தை யவள் அறியும்படி செய்யவேண்டு மென்றும் கருதினன்.

ஜெயசிங் சுமார் ஒருமணிநேரம் எதிர்பார்த்தும் ஒரு சந்தர்ப்பமும் நேரவில்லை. அடுத்த அறையின் கதவு திறக்கப்படவேயில்லை. இன்னும் அரைமணிநேரம் காத்திருந்தான். கள்ளர் ஒருவருக்கொருவர் பேசும் வார்த்தைகள் ஒவ்வொன்று கேட்கின்றனவே யன்றி வேறொன்றுமில்லை. கடைசியில் ஜெயசிங்கால் பொறுக்க முடியவில்லை. துணிகரமாய் வேலைசெய்வதே சரியென்று துணிந்து எழுந்தான். அக்கடிதத்தைக் கையி லெடுத்துக்கொண்டு, சிவப்புச் சுண்ணத்தால் சிலுவைக்குறியிட்ட கதவைத் தட்டினன். உடனே கள்ளரிருவரும் தங்கள் நிம்மதிக்கு இடையூறு நேர்ந்ததென்று அடியுண்ட வேங்கைகள்போல் உறுமினர்கள். அதோடு முரட்டுத்தனமாய்க் குதித்தெழுந்து உட்கார்ந்தார்கள். உண்டான சந்தடியால் நடக்கும் சங்கதியையறிந்த ஜெயசிங் என்ன நடந்தாலும் எதிர்த்து நின்று தன் காரியத்தை முடித்துக்கொள்வதென்ற தீர்மானங்கொண்டான். மறுவிநாடி மிருதுவான காலடிச்சத்தம் கதவை நோக்கிவருவது கேட்டது. உடனே

கதவு கொஞ்சம் திறக்கப்பட்டு இராஜாமணி தன் எதிரில் நிற்கக்கண்டான்.

உடனே "ஆ அம்மா! தொந்தரை கொடுத்ததற்கு மன்னிக்கவேண்டும். நான் வயோதிகன். என் கண்கள் மங்கலாயிருக்கின்றன. எனக்கு மிக்க வேண்டிய நண்பர் ஒருவரிடமிருந்து கடிதம் வந்தது. அதை வாசிக்க என்னால் முடியவில்லை. தயைசெய்து வாசித்துக் காட்டினால் என்மனக்கலக்கம் ஒழியும்" என்றான்.

அச்சமயம் உள்ளே யிருக்கும் கள்ளர் சந்தேகங் கொண்டு முணமுண வென்னும் சத்தத்தைக் கேட்டதும் இராஜாமணி கதவை நன்றாகத் திறந்துவிட்டு ஜெயசிங்கை நோக்கி "ஆகா. என்னால் கூடுமானால் வாசித்துக் காட்ட ஒரு தடையுமில்லை" என்றாள்.

அச்சமயம் சின்னக் கள்ளன் அவள் அருகில் வந்து "எதோ! முன்னே நான் அக்கடிதத்தைப் பார்க்கட்டும்" என்று கூறிக்கொண்டே அவள் கரத்திலிருந்த கடிதத்தைப் பிடுங்கிக்கொண்டான். இராஜாமணி அச்சமயம் தன் இயற்கைக் குணமாகிய தைரியத்தையடைந்து வெறுப்போடும் அலட்சியத்தோடும் "உனக்கு எப்போதும் எல்லாவற்றிலும், மிக்க அற்பமானதும் நமக்கு எள்ளளவும் சம்பந்த மில்லாததுமான விஷயங்களிலுங்கூட சந்தேக முண்டாய் விடுகிறது. சந்தேகப் பிராணிகளுக்கு இருண்டதெல்லாம் பேயே. இக்கடிதத்தில் நம்மைப்பற்றிய சங்கதியொன்றுமே யில்லை. இப்படி யதை யென்னிடத்தில் கொடுத்துவிடு" என்றாள்.

அம்முரடன் "நீ பேசாமல் வாயைமூடிக்கொண்டிரு" என்று அக்கடிதத்தைப் பிரித்து இரண்டொரு விநாடியுற்று நோக்கியபின் "சட் இது ஒன்றுமே தெரியவில்லை"

என்று கூறிவிட்டு, முரட்டுத்தனமான பார்வையோடு உறு மிக்கொண்டே சற்று பின்னால் நின்றுகொண்டிருந்த தன் தந்தையிடமதை யளித்து "இதோ நீ பார்" என்றான்.

பெரியகள்ளன் அதைப்பார்த்து "சந்தேகமின்றி ஒன்றுமே தெரியவில்லை. இது மலைநாட்டில் வழங்கும் மலையாள பாஷை" என்றான். இராஜாமணி "ஆம்; இவர் அந்த நாட்டில் பிறந்தவர். இவர் நண்பரும் அந்நாட்டா ராதலால் அப்பாஷையில் எழுதாமல் வேறெப்பாஷையி லெழுதுவார்கள் ?" என்றாள்.

தந்தை கடிதத்தை யவளிடமளித்து "இந்தா இதை வாசித்துக்கூறு. உனக்குத்தான் அப்பாஷை தெரியுமே. பத்திரம் இதிலுள்ள சங்கதியின்னதென்று என்னிடம் நான் அறியாத விவகாரம் இங்கொன்றும் நடக்கக்கூடாது. கூறு. தெரிந்திருக்கட்டும்" என்றான்.

ஜெயசிங்:—அம்மா தயைசெய்து இதிலுள்ள வார்த்தை களை வாசி. என் நண்பர் என்ன எழுதினாரென்பதை யறிய நான் மிக்க ஆவலோ டிருக்கிறேன். இது எனக்கு வந்த கடிதம். இதிலுள்ள சமாசாரத்தை நானறியவேண்டும் என் பாழும் கண்பார்வை மங்கிப் போய்விட்டதால் உனக்குத் தொந்தரை கொடுக்க நேர்ந்தது. நீங்கள் பலபாஷைகள் படித்திருப்பீர்க ளென்று எண்ணியே இங்குவந்தேன். கோபிக்க வேண்டாம்" என்றான்.

இராஜாமணி மிருதுவான பார்வையோடு ஜெயசிங் கை நோக்கிப் பிறகு அக்கடிதத்தைப் பார்த்து பின்கண்ட படி வாசித்தாள். மலையாள பாஷையில் அவள் வாசித்த தைக்கேட்ட ஜெயசிங், அச்சமயம் அவளுக் குண்டான மனக்கலக்கத்தைக் கண்டதும், "மிக்க வந்தனம். என் நண்பன் நான் கொடுக்கவேண்டிய வாரவாடகையைத்

தான் அளிப்பதாகவும், அவன் வரும்போது நான் வீட்டிலிருக்கவேண்டுமென்றும் கூறுகிறான்." என்று கூறிக்கொண்டே சற்றும் ஐயமில்லாதவன்போல் அந்த முரட்டுக்கள்ளரை நோக்கினான்.

மூத்தகள்ளன்:—"அதில் கூறப்படும் வார்த்தைகளின் அர்த்தம் அதுதானா? நீ சொல்" என்று தன் புத்திரியைக் கேட்டான்.

அப்பெண் தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு "இதோ இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் அப்படியப்படியே அர்த்தத்தைக்கூறுகிறேன்." என்றுமொழிந்து

"என் நண்பனே நீ பயப்பட வேண்டாம். உன் நண்பர் உன்மேல் மிக்க அன்புகொண்டிருக்கிறார். உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறார். இன்னும் நான்குமணி நேரங்களில் நீ சுகமடைவாய். தைரியத்தோடும் உன் சுயபுத்தியோடும் நடந்துகொள். மலையாளத்தார் வழக்கம் இப்படித்தான் எழுதுவது" என்று கூறிவிட்டு, ஜெயசிங்கை நோக்கி "உன் நண்பர் உன்மேல் அன்புடையவராய் உனக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருப்பதைப்பற்றி நான் சந்தோஷமடைகிறேன்" என்று கூறிவிட்டுப் புன்னகையோடு அக்கடிதத்தை யவனிடமளித்துவிட்டாள்.

ஜெயசிங் கடிதத்தை வாங்கிக்கொண்டு உடனே யங்கிருந்து திரும்பினான். அவள் வாசித்ததைக் கேட்டபோது அவன் பிரமையடைந்து விட்டான். கூடுமானால் அவளைப் பேசவொட்டாதபடி நிறுத்தி விட்டிருப்பான். ஏனெனில் அத்தகைய துஷ்டர்கள் முன் அம்மாதிரி வார்த்தைகளை அவள் வாசிப்பதைக் கேட்டதே அவன் நெஞ்சு நடுங்கிவிட்டது. அந்த முரட்டுக் கள்ளர் முன்னமே யியற்கையில் சந்தேக முடையவர்கள். அவர்களிடம் இத்தகைய மொழிகளைக் கூறினால் அவர்கள் விபரீத

மாய் எண்ணிக்கொள்ளத் தடையே யில்லை யென்பது ஜெயசிங்கின் அபிப்பிராயம். அவளுக்கென்ன பைத்தியமோ என்று கருதினன். ஆனல் அவள் அவ்வார்த்தைகளைக் கூறியபின் கடைசியில் தான் மெய்யாகவே அவற்றின் பொருள் தன்னைப் பற்றியதே யென்று கருதாதவள் போல் மிக்க பெருந்தன்மையோடு நடித்ததற்காக ஜெயசிங் மிக்க வியப்படைந்தான்.

ஆகையால் இன்னும் அதிகமாக அவளிடம் நன்றி வைத்தவனுய் அதை விட்டுத் தன் அறைக்குச் சென்முன். அதன் பிறகு அவள் தனியாக வந்து தன்னைக் காண்பாள் என்று மிக்க ஆவலோடு காத்துக்கொண் டிருந்தான். ஏனெனில் இப்போது அக்கடிதம் தங்கம்மாள் எழுதினளென்றும், அதில் குறித்த விஷயங்கள் தன்னைப் பற்றியவே யென்றும் அவள் நன்கறிவாளாதலின் எப்படியாயினும், எத்தகைய பீதியும் மனக்கலக்கமு மிருப்பினும் தனியே வந்து தன்னைக்கண்டு பேச அவள் விரும்புவாளென்று அவன் நன்ருயறிவான். அதனல் பொறுமையோடு அவள் வரவிற்காகக் காத்துக்கொண் டிருந்தான். ஆனல் அவன் நம்பிக்கை வீணுகவில்லை.

சுமார் ஒருமணி நேரங்கழித்து இராஜாமணி வெளியில் வந்து அவன் அறைக்கு எதிரே நின்று மூக்கின்மேல் விரலை வைத்துப் பேசவேண்டாம் என்று சமிக்கை செய்தாள்.

ஜெயசிங் முன்யோசனையோடு அவளுக்குக் கூற வேண்டிய சங்கதியை யொருகடிதத்திலெழுதி ஆயத்தமாகக் கரத்தில் வைத்துக்கொண் டிருந்தான். ஆகையால் சட்டென்றெழுந்து சென்று அவள் தாழ்வாரத்திலிருக்கும் போதே அக்கடிதத்தை யவளிடமளித்து "பேசவேண்டாம். இக்கடிதத்தி லிருக்கிறபடி நடந்தால் உனக்கு

நன்மை" என்று சமிக்கை செய்தான். அக்கடிதத்தில் அவன் எழுதிய சங்கதி பின் வருமாறு:—

"உன் தமையன் வெளியில் செல்லும் சமயம் பார்த்து நீ அதிகமாக ஒரு மேல் அங்கியும் சால்வையும் அணிந்து கொண்டு இந்த அறைக்கு வந்துவிடு. அந்த மேல் அங்கி சால்வை யிரண்டையும் இங்கு வைத்துவிட்டு உடனே கீழ்ச்செல்லும் படிகளின் தலைப்பிலிருக்கும் அறைக்குப் போய்விடு. இதற்கு மாறாக நடக்கலாகாது. நீ ஒன்றும் பேசவும் வேண்டாம். உன் தந்தையும் தமையனும் சிறை செய்யப்படுவார்கள். உனக்குப் பிரிய மிருந்தாலும் இல்லா விடினும் இது நடந்தே தீரும். இதைத் தடுக்க உன்னால் முடியாது. ஆனால் நீ இதில் கூறியபடி நடந்தால் அவர்கள் சிறைசெய்யப்படுவது பகிரங்கமா யிராமல் இரகசியமாய் உனக்கும் உன் கணவருக்கும் அவமான மின்றி நடை பெறும்."

அவள் இக்கடிதத்தை வாசிக்கும்போது அவள் முகத்தில் ஒருவிதமான தைரியம் தோன்றியது. முழுமையும் வாசித்தபின் அவள் ஜெயசிங்கைக் குறிப்பாய் நோக்கிக் கொண்டே அக்கடிதத்தைத் தரையில் நழுவவிட்டாள். ஜெயசிங் கீழே விழுந்த கடிதத்தைச் சுட்டிக்காட்டி, நான் அதில் கூறியுள்ளதற்கு எள்ளளவும் மாறாக நடக்க முடியாது என்று குறிப்பாய்ச் சமிக்கை செய்தான். ஜெயசிங்கின் துணிகரமான பதிலை யவள் உணர்ந்து கொண்டாள். ஆகையால் விசனத்தோடு தலைகுனிந்து அக்கடிதத்தைச் சுட்டிக்காட்டி அதன்படி மனதார நடப்பதாய்த் தன் இருதயத்தின்மேல் கரத்தைவைத்துச் சமிக்கையாய்க் காட்டிவிட்டுச் சென்றாள். அதன்மேல் ஜெயசிங் அக்கடிதத்தை யெடுத்துக் கிழித்தெறிந்து விட்டான்.

அவன் அந்த அறைக்கு வந்ததுமுதல் அப்போது தான்

மனத்திருப்தியோடு தன் அறையின் கதவை மூடினன். இனி யவன் செய்யவேண்டிய வேலைக்காகத் தன் மாறு வேடத்தை யவசியம் களைந்துவிட வேண்டும். நோயாளி யாகிய சித்திரக்காரன் வேலைமுடிந்தது. இனித்துப்பறியும் ஜெயசிங்காக மாறிவிட வேண்டும். மணி இரண்டடிக்கும் சமயம் முன் ஏற்பாட்டின்படி அவனுடைய உதவியாட்கள் வந்து விட்டார்கள்.

முன்னே ஆனந்தசிங் வந்தான். அவன் ஜெயசிங் இருக்கும் அறைக்குப் பக்கத்திலிருந்த ஒருபெரிய அறைக் குள் மறைந்து கொண்டான். இரண்டொரு நிமிடங்கள் கழித்துத் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவர்களில் மிக்க அபூர்வ பலசாலிகளான இருவர் தங்கள் பாதரட்சை களைக் கழற்றிவிட்டுப் படிகளின் வழியாக ஏறிவந்து வீட் டிலுள்ளவர்களில் ஒருவருக்குமே எள்ளளவு சந்தேகமும் தோன்ருவண்ணம் மிக்க சாமார்த்தியமாய் ஆனந்தசிங் நுழைந்த அதேயறைக்குள் போய் மறைந்துவிட்டார்கள். கடைசியாக வீட்டுக்காரி, ஜெயசிங் இராஜாம்பாளைக் கடை சியில் எந்த அறைக்குள் சென்றிருக்கும்படி கூறினனோ அந்த அறைக்குள் அவளுக்குத் துணையாயிருக்கச் சென் ருள்.

இப்போது கடைசி நாடகத்திற்கு யாவும் ஆயத்த மாய் விட்டன. கள்ளரில் சின்னவன் வெளியில் செல்லும் வேளையாதலின் அதற்காக எதிர்பார்த்துக்கொண் டிருக் கிருர்கள். ஏனெனில் அத்தகைய மகாமுரடர்களான போக்கிரிகளை ஏககாலத்தில் இருவரையும் பிடிப்பதைவிட தனித்தனியாக ஒவ்வொருவராய்ப் பிடிப்பதில் அனுகூல மிருக்கிறது. அப்படிச் செய்தால் இரத்தம் சிந்தாமல் ஒரு வர்க்கும் துன்பம் நேரவொட்டாமல் பிடித்துக் கொள்ள லாம்; அதோடு மிக்க முக்கியமான விஷயம் இது பகிரங்

கத்திற்குவராமல் காரியத்தை நிறைவேற்றலாம். பூபாலப் பிள்ளையின் கௌரவத்திற்காக இவ்வாறு செய்யவேண்டியதா யிருக்கிறது, இன்றேல் தக்க ஆசாமிகளாய் ஐந்தாறு பேரைக் கொண்டு வந்து ஒருவிநாடியில் அவர்களைப் பிடித்துக்கொள்வார்கள்.

மணி யிரண்டடித்தது. உடனே கள்ளர் இருக்கும் அறையின் கதவு திறக்கப்பட்டதும் சின்னக்கள்ளன் தன் இயற்கைக் குணப்படி முரட்டுத்தனமான நடையோடு இவர்களிருக்கும் அறைகளின் முன்பாகவே நடந்து கீழிறங்கிச் சென்றான். அவன் சென்றதும் ஜெயசிங் மிக்க ஆவலோடு இராஜாமணிக்காகக் காத்துக்கொண் டிருந்தான். ஏனெனில் அவன்கூறியபடி அவள் வேறொரு மேல்சட்டையோடும் சால்வையோடும் இன்னும் வரவில்லை.

இரண்டொரு நிமிடங்களில் இராஜாமணி வந்து ஒரு நிமிடம் அங்குநின்று மேற்சட்டையையும் சால்வையையும் அவனிடம் அளித்துவிட்டுச் சென்றாள். இனி நடக்கவேண்டிய விஷயங்களே மிக்க புத்திசாமார்த்தியத்தோடும் தைரியத்தோடும் நடைபெற வேண்டியவை.

ஜெயசிங் இராஜாமணியின் சட்டையைத் தான் அணிந்துகொண்டு அவள் சால்வையை நன்றாக முகம் மறையும் வண்ணம் போர்த்துக்கொண்டான். அதோடு கைக்குட்டையை ஒருகரத்தில் பற்றி நன்றாக மூக்கினருகில் முகத்தில் அணைத்துக் கொண்டான். இத்தகைய மாறுவேடத்தோடு துணிகரமாய்க் கள்ளர் அறைக்குள் நுழைந்தான். அந்த அறையின் கதவு அச்சமயம் கொஞ்சம் தான் திறந்திருந்தது. அன்னியரைப்போல் அபிநயம் செய்வதில் கைதேர்ந்த ஜெயசிங் இராஜாமணி எப்படி நடப்பாளோ அவ்வாறே நடந்து கொண்டு அவள் எப்படி அச்சத்தோடு மெதுவாகக் கதவைத் திறப்பாளோ அப்படியே

திறந்து கொண்டு சென்ருன். ஆயினும் அச்சமயம் அறைக் குள் ஒரு பெரிய சாய்வு நாற்காலியில் இராஜாமணியின் தந்தையாகிய பெரிய முரட்டுக் கள்ளன் சாய்ந்து படுத் திருப்பதைக் கண்டதே யவன் மனதில் சற்று அச்சமே யுண்டாயிற்று.

ஆயினும் ஜெயசிங் ஸ்திரீகளைப் போலவே தேகத்தை வளைத்துக்கொண்டு மெதுவாகக் கதவை மூடிவிட்டு அங் குள்ள ஒருசாளரத்தினருகிலிருந்த ஒரு ஆசனத்தை நோக்கிச் சென்ருன். தன் புத்திரியே வந்தவளென்று கருதிய கள்ளன் "நீ கூட அடுத்த அறையிலுள்ளவன் போல் குலைக்கமாட்டாயென்று கருதுகிறேன்" என்ருன். ஜெயசிங் அவன் வார்த்தைகளைக் கவனிக்காதவன்போல் சாளரத் தருகில் சென்று வீதியைப் பார்த்ததுபோல் உட் கார்ந்தான். ஏனெனில் அவன் எழுந்து தன்னை நோக்கி வரவேண்டு மென்பதே ஜெயசிங்கின் கருத்து. எதற்காக வெனில் இப்போது அவன் அறையின் வாயிற்படியைப் பார்த்தபடி யிருக்கிருன். அவன் இந்த நிலையிலிருக்கும் போது அவன்மேல் பாய்ந்து அவனைப் பிடிப்பது கஷ்டம். அதோடு இப்போது அவனுடைய பிரம்மாண்டமான பலம்பொருந்திய உருவத்தை நேரில் நன்ருகப் பார்த்த தால் இந்த நிலைமையில் அவனை யொருவர்க்கும் ஆபத் தின்றிப் பிடிப்பது கஷ்டம் என்று ஜெயசிங்குக்கு நன்ருகப் புலப்பட்டது.

ஆனல் கள்ளனே மனச்சலிப்பாலோ சோம்பேறித் தனத்தாலோ அங்கிருந்து எழுந்திருக்கவேயில்லை. அச் சமயம் அறைக்கு வெளியில் ஆனந்தசிங் முதலியவர்கள் மெதுவாக வருவது போன்ற சத்தம் ஜெயசிங் செவிகளில் வீழ்ந்தது. அவன் உடனே ஒரு தந்திரம் செய்தான். அதா வது சாளரத்தின் வழியாய் வீதியில் ஏதோ அதிசயமான

சம்பவத்தைக் கண்டவன்போல் "ஆகா! அடடா!" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு குனிந்து பார்த்தான்.

அதைக்கேட்டதே எப்போதும் சந்தேகமுடைய கள்ளன் சட்டென்று துள்ளியெழுந்து "என்ன அங்கே? நீ என்ன பார்க்கிறாய்?" என்று கூறிக்கொண்டே அவனருகில் சென்றான். மறுவிநாடி கதவு மெதுவாகத் திறக்கப்பட்டதும் ஆனந்தசிங்கும் அவன் நண்பர் இருவரும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கள்ளனைப் பிடித்துக் கொண்டார்கள். அவன் மிக்க துணிகரமும் அதிக பலமுமுடையவனாயினும் பருத்துக் கொழுத்த தேகமுடையவனெனினும் அச்சமயம் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள அவனால் முடியவில்லை.

ஆயினும் சபித்துக்கொண்டே "ஏ பெண்ணே! இது உன்னுடைய குற்றமே" என்று கூறி, எதிரிலிருப்பது தன் புத்திரியே யென்று எண்ணிக்கொண்டு குனிந்து அவள் செவியருகில் குசுகுசு வென்று கூறுவதற்காகத் தன்னைப் பிடித்திருக்கும் மூவரையும் இழுத்துக்கொண்டு நகர்ந்து ஜெயசிங்கின் அருகில் சென்று "போய்க் கதவின் மேலிருக்கும் அக்குறியைக் கலைத்துவிடு, இன்றேல்—தெரியுமா— நான் என்ன செய்வேன் தெரியுமல்லவா-எப்படியும் செய்து விடுவேன். நான் கூறுவது கேட்கிறதா?" என்றான்.

ஜெயசிங் முகத்தை மறுபக்கம் திருப்பியபடி எழுந்து மெதுவாகச்சென்று கதவிலிருந்த சிலுவைக் குறியைக் கலைத்துவிட்டான். ஆனால் அதற்குள் கள்ளன் நன்றாய்க் கட்டப்பட்டு வாயில் துணியடைக்கப்பட்டாய் விட்டதைக் கண்டதும், துரிதமாய்த் தன்னிடம் வைத்திருந்த சிவப்புச் சுண்ணத்தை யெடுத்து மறுபடி கதவில் முன் இருந்தது போலவே நன்றாய்ச் சிலுவைக் குறி போட்டுவிட்டான்.

பிறகு அவன் திரும்பிச்சென்று முன்போல் சாளரத்தி னருகில் உட்கார்ந்து கொண்டான்.

பெரிய கள்ளனைப் பிடித்ததுபோலவே தந்திரமாகச் சிறிய கள்ளனையும் பிடித்துக்கொள்ள வேண்டுமென்றே ஜெயசிங் அவ்வாறு செய்தான். அதற்காகவே ஆனந்த சிங்கும் அவன் நண்பர்களும் இப்போது பூரணமாகச் சக்தியற்றிருக்கும் பெரிய கள்ளனை யிழுத்துக்கொண்டு போய்ப் பக்கத்திலிருக்கும் அறையில் வைத்தார்கள். இப் போதவன் சற்றேனும் சந்தடி செய்யவே முடியாது. ஆனந்தசிங்கும் அவன் நண்பர்களும்கூட அங்கேயே சந் தடி செய்யாமல் மறைந்திருந்தார்கள். ஜெயசிங் சின்னக் கள்ளனுடைய வரவிற்காக எதிர் பார்த்துக்கொண்டு சாளரத்தினருகில் உட்கார்ந்திருக்கிறான். ஒரு விசேஷமும் நடைபெறாததுபோல் கதவு வழக்கம்போல் மூடப்பட் டிருந்தது.

ஜெயசிங் மனத்தளர்ச்சியடையாமல் பூரண தைரியத் தோடு உட்கார்ந்திருந்தான். அவன் மிக்க தைரியசாலி யான இராஜாமணியின் உடைகளை மேலே யணிந்திருந்த தால் அவளுடைய தைரியம் அவன் உள்ளத்தில் பாய்ந் ததுபோ லிருந்தது.

---

## 20—வது அத்தியாயம்.

சுமார் அரைமணிநேரங் கழிந்தது. இவ்வளவு நேரம் சின்னக்கள்ளன் வெளியில் இதுகாறும் தாமதித்த தில்லை. ஒரு சமயம் அவன் ஏதேனும் சந்தேகங்கொண்டு ஓடிவிட்டானோ என்று ஜெயசிங் சற்று கலக்கமடைந்தான். மறுநிமிடம் யாரோ தட்தட் என்று படிகளிலேறி மேல் வரும் சத்தம் கேட்டதும் கோபத்தாலோ இயற்கையா

யுள்ள முரட்டுக் குணத்தாலோ கதவு பலமாக தடா லென்று தட்டப்பட்டதும், படீர் என்று கதவைத் திறந்து கொண்டு சின்னக்கள்ளன் உள்ளே நுழைந்து வருவதை ஜெயசிங் கண்டு எத்தகைய சம்பவத்திற்கும் ஆயத்தமாக விருந்தான்.

அவன் வாயிற்படியைக் கடந்து இரண்டடி வைத்த தும் நின்று உறுமிக்கொண்டே "எங்கே தகப்பனார்?" என்றான். ஜெயசிங் தலையை மெதுவாக எனக்குத் தெரி யாதென்று அசைத்து மௌனமாயிருந்தான். அவன் தன் கரத்திலிருந்த பிரம்பால் தடாலென்று பூமியை யடித்து தன் தங்கையென்று கருதியிருக்கும் ஜெயசிங்கை நோக்கி "நான் நாணயமான ஒரு கேள்வி கேட்கும்போது நீ அங்கு சாளரத்தினருகில் உட்கார்ந்து உன்மத்தம் பைத்தியக்காரியைப்போல் வெளியில் பார்த்துக்கொண்டு எனக்கு விடையளிக்காமல் பேசாமலிருப்பதன் அர்த்த மென்ன?" என்றான்.

ஜெயசிங்கோ அப்போதும் பதிலளிக்கவில்லை. கள் ளனுக்குக் கோபம் அடக்க முடியாததாய் விட்டது. ஆயி னும் ஏதோ அபாயமாகிய காற்று வீசுவதுபோல் அவ னுக்கு ஐயமுண்டானதால் அவன் கோபத்தை வெளியிட முடியவில்லை. ஆனால் மிக்க கோபத்தோடு காட்டு மிருகம் போல் ஜெயசிங்கை விழுங்கி விடக் கருதியவன்போல் அங்கு நின்றபடி கோபத்தனல் வீசும் கண்களோடு கண் களை யுருட்டியபடி யவனை யுற்றுநோக்கினான். ஆனால் அந்த விடத்தைவிட்டுப் பெயரவில்லை.

சின்னக்கள்ளன் தன்னருகில் வந்தால் தான் அவனைச் சந்தடி செய்யாமல் பிடிக்க முடியும். அவனோ எட்டவே நிற்கிறான். ஜெயசிங் பொறுத்துப் பார்த்தான். காரியம் ஆலசியமாகிறது. கடைசியில் துணிந்து சாளரத்தின் வழி

யாய் வீதியை நோக்கி அங்கு யாருக்கோ கையால் சமிக்கை செய்வதுபோல் அபிநயம் செய்தான். அந்தத் தந்திரம் உடனே பலித்து விட்டது. எப்படியெனில் அதைக் கண்டதே, கள்ளன் "ஆ! கள்ளக்கழுதை!" என்று மிக்க உக்கிரத்தோடு சத்தமிட்டுக்கொண்டு கையிலிருந்த பிரம்பை யோங்கிக்கொண்டு ஜெயசிங்கின்மேல் பாய்தான். ஆனால் மறுவிநாடி, மிக்க உன்னிப்பாய் யாவும் கதவின் சந்தில் பார்த்துக்கொண்டிருந்த ஆனந்தசிங்கும் அவன் ஆட்களும் வேங்கைகள் போல் பாய்ந்துபோய் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். ஆயினும் அதற்குள் அம்முரடன் தன் கரத்திலிருந்த பலமான பிரம்பால் ஓங்கி ஜெயசிங்கின் மண்டைமேலடித்துவிட்டான்.

ஜெயசிங்குக்கு இத்தகைய சம்பவம் ஏதேனும் நேருமென்று முன்னமே தெரியும். அந்த முரடர்களின் வஞ்சம் இராஜாமணிமேல் விழாதபடி யவளைக் காப்பாற்ற வேண்டுமென்று கருதியே அவன் அவள் உடைகளை யணிந்து அவளைப்போல் வேடமணிந்து அங்கு உட்காரத் துணிந்தான். ஆகையால் நடந்த சம்பவம் அவன் எதிர் பார்த்ததேயன்றி வேறில்லை. ஆகையால் அச்சமயம் அச்சம்பவம் அவனுக்கு மனத்தாங்கலை யளித்தாலும் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. அவன் உடனே சமாளித்துக்கொண்டு எழுந்து நின்று தன் வேடவுடைகளைக் களைந்து விட்டுத் தான் ஆரம்பித்த வேலையைப் பூர்த்தி செய்யத் தொடங்கினன்.

தன் தங்கை யென்று தான் கருதிய உருவம் தன் தங்கையல்ல வென்றும், அதற்குமாருக போலீஸ்காரரில் ஒருவனுகிய ஒரு ஆடவனென்றும், அவன் தன் தங்கையின் உடைகளை யணிந்திருந்ததால் தன் தங்கையே யவைகளை யவனிடம் அளித்திருக்க வேண்டு மென்றும், ஆகையால்

அவளே தான் சிறையாக்கப் படுவதற்கு உளவாயிருந் திருக்க வேண்டு மென்றும், இவ்வளவுதூரம் நடந்த வரையில் தன் தந்தை முன்பே சிறை செய்யப்பட் டிருக்க வேண்டு மென்றும் இவ்வளவு விஷயங்களும் ஏககாலத் தில் அவன் மனதிற்குப் புலப்பட்டதே அவனடைந்த கோபத்திற்கு ஒரு அளவில்லே. அச்சமயம் இராஜாமணி மட்டும் அவன் எதிரிலிருந்து அவன் கரங்கள் தன் சுயா தீனத்தி லிருந்தால் கட்டாயம் அவளேக் கொன்றுவிட் டிருப்பான் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லே.

எல்லா விவகாரங்களும் முடிந்தபின் ஆனந்தசிங் தன் இரண்டு கூட்டாளிகளேயும் அனுப்பிவிட்டுக் கள்ளர் இரு வரையும் தன் முன்பாக நிறுத்தினன். அப்போது மூத்த கள்ளன் இனித் தப்ப முடியாதென்பதை நன்குணர்ந்தான். சிறியகள்ளன் பிடிக்கப்பட்டதே பெரியகள்ளனுடைய வாயில் அடைத்திருந்த சிலே யெடுக்கப்பட்டது. தன் மகன் துரிதமாகக்கூறிய இரண்டொரு மொழிகளால் அவன் எல்லாச் சங்கதிகளேயுமறிந்து கொண்டான். அதனல் அடக் கொணு ஆத்திரமும் ஆவேசமும் கொண்டு ஆனந்தசிங்கை நோக்கி,

"நான் கோருவதெல்லாம் கூடி ஒன்றுமட்டுமே. அதாவது அப்பெண் என் கரத்தில் சிக்க விடப்பட வேண் டும். அவள் எங்கே யிருக்கிருள். நான் அவளேப் பார்க் கட்டும். ஒவ்வொரு தந்தையும் தன் புத்திரியைக் காணச் சுதந்தர முடையவனே" என்றுன்.

ஆனந்தசிங்:—"பேசாமல் வாயை மூடிக்கொண்டிரு. வீண் குழப்பம் செய்வதில் ஒரு பயனுமில்லே. உன் நாடகம் முடிந்து விட்டது. இனி பேசாமல் மரியாதையாக

அடங்கியிருந்தால் தப்பினாய். தெரிகிறதா? நீ உன் மகளைப்பார்ப்பாய். ஆனால் அவளைக் காப்பாற்ற அவள் கணவன் இங்கு வந்தபின்பே காண்பாய்'' என்றான்.

இளைய கள்ளன்:—“ஆ! அவள் கணவனா? ஓகோ! உனக்கு அச்சங்கதிகளெல்லாம் தெரியும்போ லிருக்கிறது. அவன் மிக்க பணக்காரனென்றும் பெருமைக்காரனென்றும் கூறுகிறார்கள். அவன் வந்து நாங்கள் நாய்கள் போல் இங்கு கட்டிப்போடப்பட் டிருப்பதைப்பார்த்து, தன் மாமனாரும் தன் மைத்துனனும் இந்த நிலைமையிலிருப்பது தன் மனதிற்கு எவ்வளவு நன்றாக விருக்கிறதென்று கூறட்டும்'' என்றான்.

ஆனந்தசிங் “அவர் வருகிறார்'' என்றான். ஏனெனில் அவன் முன்னமே இரகசியமாய் பூபாலப் பிள்ளையின் வீட்டிற்கு ஆளனுப்பி யிருந்தான். ஆகையால் தைரியத்தோடு அவர் வருவார் என்று கூறிவிட்டு, “நீங்கள் இப்போது சிறைச்சாலைக்குப் போய் அங்கு காலத்தைக் கழிப்பதே நலமென்று அவரே கூறுவார்'' என்றான்.

சிறிய கள்ளன் “நீ யழிந்து போவாய். ஆனால் அவன்—'' என்றான். யாவும் கேட்டுக்கொண்டிருந்த ஜெயசிங் “ஆனால் அவன்....என்றால் என்ன?'' என்று கூறிக்கொண்டே நின்றான். உடனே கதவு திறக்கப்பட்டதும் பூபாலப்பிள்ளை வெளுத்த முகத்தோடும் கலவரமடைந்த மனதோடும், ஒருவிதக் குழப்பத்தோடு அறைக்குள் வந்தார்.

பூபாலப்பிள்ளையைக் கண்டதே இரண்டு கள்ளரும் தங்கள் தலை குனிந்த நிலைமையிலிருந்து எழுந்து மெதுவாய் உட்கார்ந்தார்கள். ஏனெனில் பூபாலப்பிள்ளை தன்

மாமனாரும் மைத்துனனும் சிறைவாசம் செய்வது தனக்கு அகௌரவத்தையுண்டாக்குமென்று கருதித் தங்களை யெப்படியாவது காப்பாற்றி விடுவான் என்ற எண்ணமேயன்றி வேறொன்றுமில்லை. ஆனால் அவர்களுடைய துஷ்டகுணமும் தங்கள் அக்கிரம நடக்கையில் அலட்சியமும் கொஞ்சங்கூட அப்போதும் அவர்களை விட்டொழியவில்லை. இச்சமயத்தில் மட்டும் தங்கள் தலையெழுத்து அவனிடம் இருப்பதாக மட்டும் அறிந்துகொண் டிருந்தார்கள்.

சின்னக்கள்ளன்:—"மைத்துனரே! எப்படி யிருக்கிறீர்கள்?" என்று அதிகப்பிரசங்கித்தனமாய்க் கேட்டான்.

அம்மொழிகளைக் கேட்ட பூபாலப்பிள்ளை மிக்க வருத்தமும் நாணமுமடைந்து நாற்புறமும் நோக்கினார். அவர் ஆனந்தசிங்கை நோக்கி "என் மனைவி?" என்றார்.

ஆனந்தசிங்:—"உமது மனைவி சமீபத்திலுள்ள அறையில் க்ஷேமமாகவே யிருக்கிறாள். தாங்கள் அனுமதியளித்தால் அந்தம்மாளை வரவழைக்கிறேன்" என்றான்.

பூபாலப்பிள்ளை:—"வேண்டாம் வேண்டாம். இதற்குள் வேண்டாம். நான் முன்னே இச்சண்டாளர்களைக் கண்டு இவர்கள் சம்பந்தத்தால் என் மனைவி எவ்வளவு மனவருத்தமடைவாள் என்பதை யறிந்து கொள்ளவேண்டும்" என்றார்.

இராஜாமணியின் தந்தை "உன் மனைவி—அவளுக்கும் இதற்கும் என்ன சம்பந்த மிருக்கிறது? இப்போதிருக்கிற விஷயம். இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய். எங்களை யிந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற என்ன செய்யப் போகிறாய் என்பதே" என்றான்.

பூபாலப்பிள்ளை:—"நான் அப்படிப்பட்ட காரியம் ஒன்றும் செய்யமாட்டேன். நீங்கள் இப்போதடையவேண்

டிய தண்டனைக்குப் பூரணமாய்ப் பாத்திரவான்களே. நான் இருந்தாலும் இல்லாவிடினும் உங்கள் தண்டனைகளை நீங்கள் பூரணமாக அனுபவிக்க வேண்டியவர்களே'' என்றார்.

சின்னக்கள்ளன்:—"இந்த விஷயங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தால் மிக்க வேடிக்கையாக விருக்கும்'' என்றான்.

ஜெயசிங்:—பத்திரிகைகள் இதைப்பற்றி ஒன்றுமே வெளியிடா. அவைகளுக்கு இச்சங்கதி தெரியவே தெரியாது. இந்த விடத்தை விட்டு நாம் செல்லுமுன் உங்களுக்கும் பூபாலப்பிள்ளைக்கும் அவர் மனைவிக்கும் இருக்கும் எல்லாச் சம்பந்தமும் அடியோடு மண்ணில் புதைக்கப்படவேண்டும். தெரிகிறதா? அவர்களைப் பற்றிய ஒருவார்த்தைகூட உங்கள் வாயினின்றும் வெளிவரலாகாது. இந்த விநாடியிலிருந்து தெரிகிறதா பத்திரம். நான் இதை யொரு கண்டிப்பான நிபந்தனையாக வைத்திருக்கிறேன். இதிலிருந்து நீங்கள் ஒரு மயிரிழைகூடத் தவறலாகாது'' என்றான்.

கள்ளர் இருவரும் ஏககாலத்தில் ஒரே குரலாய் "ஓகோ! நீ நிபந்தனை வைத்திருக்கிறாயா? அப்படியா சங்கதி? எங்களுக்கு நிபந்தனைகள்கூற நீ யார்? யார் நீ? நாங்கள் உன் நிபந்தனையின்படி நடப்போமென்று நீ என்ன தைரியத்தால் கருதுகிறாய்? நீ எங்களைப் பழையபடி நாங்கள் இருந்த சிறைச்சாலைக்குக் கொண்டுபோய் விடலாமேயன்றி வேறென்ன உன்னால் முடியும்? நாங்கள் அதற்கு அஞ்சியிருக்கும் ஆசாமிகளென்று நீ கருதினால் நீ மூடனே'' என்றார்கள்.

ஜெயசிங் அவர்களை மிக்க அலட்சியமான பார்வையாய் நோக்கி "ஏ முழுமூடர்களே! இவ்வளவுதானா உங்

கள் புத்தி. உங்கள் மனதில் நீங்கள்செய்த இதற்குமேற் பட்ட பயங்கரமான குற்றம் எதுவும் உறுத்த வில்லையா? இதென்ன பாருங்கள் !" என்று தன் மடியிலிருந்து ஒரு மோதிரத்தை யெடுத்து அவர்கள் கண்முன் காட்டினன். அந்த மோதிரம் ஜெயசிங் அவர்கள் வசித்திருந்த தனிவீட் டில் நெகிடித்தீயின் சாம்பரிலிருந்து கண்டெடுத்த மோதி ரம். அது அவர்கள் கொலைசெய்த ஒரு ஹாக்கரின் கையி லிருந்த மோதிரம்.

அந்த மோதிரத்தைக் கண்டதே தந்தை மகன் இரு வரும் அதைப் பிரமையோடும் திகிலோடும் உற்றுநோக் கினர்கள். மறுவிநாடி அவர்களின் துணிகரமும் அகங் காரம் பொருந்திய வார்த்தைகளும் எங்கோ போய் விட் டன. இருவரும் கருடனைக்கண்ட நாகக்குட்டிகள்போல் ஒடுங்கி விட்டார்கள். அவர்கள் முகங்கள் சவம்போல் வெளுத்து விட்டன. மிரட்சியடைந்த பார்வையோடு ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தார்கள். ஏனெனில் அடடா! நாம் யாருக்கும் தெரியாதென்று எண்ணி யிருந்த இப்பயங்கரமான இரகசியம் இவனுக்குத் தெரிந்து விட்ட தோடு அத்தாட்சியோடு இவன் அதை யறிந்துகொண் டிருக்கிறனே யென்று உணர்ந்து கொண்டார்கள்.

ஜெயசிங் அவர்களை நோக்கி "நீங்கள் உங்கள் சிறைச் சாலை யுடைகளைக் கொளுத்தினீர்களே அந்த விடத்தி லிருந்து நான் இதைக் கண்டெடுத்தேன். இது அற்ப விஷயமே, ஆனல் இதைக்கொண்டே நான் உங்களைத் தூக்கு மரத்திற்கு அனுப்பிவிடக் கூடும். இது விளையாட் டல்ல. அந்த ஹாக்கர்—" என்றதே,

பெரிய கள்ளன்:-"போதும் போதும். அந்த மோரதித்தை வெளியில் எறிந்து விடு. உங்களுக்கு எந்தச் சங்கதி.

வெளிவரலாகாதென்று கருதுகிறீர்களோ அந்தச் சங்கதியைப் பற்றி நான் ஒன்றும் கூறவே மாட்டேன். நான் அத்தகைய முட்டாளல்ல" என்று அவன் இதுகாறும் காட்டாத அவ்வளவு மிருதுவான மாதிரியாய்த் தாழ்ந்த குரலில் கூறினன்.

ஜெயசிங்:—"அப்படியே முட்டாளல்ல. இந்த மோதிரமும், நீங்கள் அந்தத் தனி வீட்டில் இருந்தபோது அங்கு நடந்த சில சம்பவங்களின் அத்தாட்சிகளும் என் வசத்தி லிருக்குமட்டும் உங்கள் உயிரே என் கரத்திலிருக்கிற மாதிரிதான். அத்தனி வீட்டில் நீங்கள் செய்த காரிய மனைத்தும் சமீபகாலத்திற்றான் எனக்கு அத்தாட்சியோடு கிடைத்தன. அந்த வீட்டில் பூபாலப் பிள்ளையும் ஒரு இரவு தங்கியிருந்தார். அந்த விடத்திலிருந்து எவ்வளவு சமீபத்தில் ஒரு செங்குத்தான பாதாள மிருக்கிறதென்பதை அவரும் அறிவார்..." என்றதே,

சின்னக் கள்ளன்:—"நீ என் பேசாமலிருக்கிறாய். நாம் ஒன்றையும் வெளியிடலாகாதென்று அவர்கள் கருதுவதாயின் அதைக்கூறட்டும். அதைவிட்டு வீண் சங்கதிகளை யெல்லாம் என் கூறவேண்டும்?" என்று தன் தந்தையை நோக்கிக் கூறினன்.

அச்சமயம் ஆனந்தசிங் தட்டென்று அவர்கள் முன்னே வந்து நின்று அவர்களைப் பார்த்தபார்வை யவர்கள் வாயை யுடனே மூடிவிட்டது. ஆனந்தசிங் அவர்களை நோக்கி, "இதோ பாருங்கள். எங்கள் ஏற்பாடுகள் என்ன வென்பதைக் கூறிவிடுகிறேன். நீங்கள் திரும்பிச் சிறைச்சாலைக்குச் சென்று உங்களுக்கு விதித்திருக்கும் தண்டனையை யனுபவிக்க வேண்டியதே. அதற்கு வேறு வழியில்லை. ஆனல் நீங்கள் மரியாதையாக நடந்து

கொண்டு, உங்களுக்கும் பூபாலப் பிள்ளைக்கும் இருக்கும் சம்பந்தத்தைப் பற்றி ஒருவார்த்தையும் வெளியிடாமலிருக்கிறவரையில் மாதமாதம் ஒரு பாங்கியில் ஒரு தொகைப்பணம் கட்டப்படும். அது எந்தப் பாங்கியென்று அவர் பின்னால் கூறுவார். நீங்கள் உங்கள் சிறைவாசத்தைக் கழித்துவிட்டு வெளிவரும்போது சேர்ந்திருக்கும் அத் தொகையையும் அதற்குக்கூடிய வட்டியையும் பெற்றுக் கொள்ளலாகும். நீங்கள் இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதிக்கிறீர்களல்லவா?" என்று கூறிவிட்டுப் பூபாலப்பிள்ளையை நோக்கி நீர் இதற்கு ஒப்புக்கொள்கிறீர்களல்லவா?" என்றான்.

பூபாலப்பிள்ளை "அப்படியே செய்யத்தடையில்லை மாதமாதம் இருநூறுரூபாய் பாங்கியில் கட்டிவிடுகிறேன்" என்றார்.

அச்சமயம் கள்ளரிருவரும் கண்களால் சமிக்கை செய்துகொண்டதைக் கவனியாதவன்போல், ஆனந்தசிங் அவர்களைநோக்கி, "ஆனால், நீங்கள் இத்தகைய பூபாலப் பிள்ளையென்ற ஒருவர் இருப்பதாக உங்களுக்குத் தெரியுமென்றாவது அவருக்கும் உங்களுக்கும் அறிமுகமென்றாவது, எவ்வித சம்பந்தமேனும் இருக்கிறதென்றாவது யாரிடமேனும், ஒருவார்த்தை யாயினும் சரி, கூறியதாய் எங்கள் செவியில் வீழ்ந்தாலோ பாங்கியிற் கட்டப்பட்ட பணத்தில் ஒரு இம்மிகூட உங்களுக்குக் கிடைக்காது. அது மட்டுமல்ல. அப்பழைய சங்கதி தக்க அத்தாட்சியோடு வெளிக்குக் கொண்டுவரப்படும். அதுவும் உங்களுக்கு வாய் திறந்து ஒருவார்த்தை யேனும் பேச அவகாசம் கிடைக்காதபடி திடீலென்று இடிவிழுந்த மாதிரியாய் உங்கள்மேல் விழும். இதை வீண் மிரட்டலென்றாவது வேடிக்கையென்றாவது கருதி மோசம் போகவேண்டாம். நான் ஒருபோதும்

என்னால் செய்யமுடியாத அல்லது எனக்குச் சந்தேகமாகத் தோன்றுகிற சமாசாரத்தைக் கூறுவதில்லை. இதை நன்றாக மனதில் வையுங்கள்" என்றான்.

கள்ளரின் முகத்தில் முன் இருந்த அகங்காரமாகிய பார்வை யடியோடு மறைந்துவிட்டது. அவர்கள் இப்போது மிரட்சியோடு ஒருவரை யொருவர் நோக்கி என்ன சொல்கிறாய் என்று வினவுகிறமாதிரி பார்த்தார்கள். ஆனந்தசிங் கூறியமொழிகள் அவர்கள் மனதில் ஆழ்ந்து பாய்ந்தன வென்று நன்கு புலப்பட்டது.

மூத்தகள்ளன் அதிருப்தியோடு ஆனந்தசிங்கை நோக்கியபடி, "நாங்கள் எங்கள் இரகசியத்தை வெளியிடா திருந்தால் நீங்கள் மூவரும் உங்களிடம் சிக்கியிருக்கும் இரகசியத்தை வெளியிடாம லிருப்பதாய் வாக்களிக்கிறீர்களா?" என்றான்.

ஆனந்தசிங்:—நாங்கள் உண்மையாகவே அவ்வாறு வாக்களிக்கிறோம்" என்றான்.

பேரியகள்ளன்:—"சரி. அப்பெண்ணைக் கூப்பிடுங்கள், நான் செல்லுமுன் அவளையொருமுறை பார்க்கட்டும். நாங்கள் ஒன்றும் கூறமாட்டோம். அவள் என்மகள். நான் அவளிடம் சந்தோஷமாய் விடைபெற்றுக் கொள்ளா விட்டாலும்——" என்றான்.

பூபாலப்பிள்ளை:—"இந்த ஆள் தன் புத்திரியைப் பார்க்கட்டும். நான் அப்படி விரும்புகிறேன்...." என்றார்.

ஜெயசிங் உடனே அறையைவிட்டு வெளியிற் சென்றான். அவன் நேராகத் தங்கம்மாளையும் இராஜாமணியையும் மறைத்துவைத்திருக்கும் அறைக்குச் சென்றான். அச்சமயம் இராஜாமணி குனிந்தபடி தன் முகத்தைக் கரங்களில் வைத்து மறைத்துகொண்டு துயரத்தோடு கடவுளைப் பிரார்த்தித்துக்கொண் டிருந்தாள். அவள் மனம்

சொல்லொணு வேதனைப் பட்டுக்கொண் டிருந்தது. ஒரு பக்கம் தான் இக்கட்டிலிருந்து மீட்கப்படுவதாயினும் மறு பக்கம் தன் தந்தையும் தமையனும் சிறையாக்கப்படப் போகிருர்கள். இதனுல் அவள் தன் விடுதலைக்காக அடைய வேண்டிய சந்தோஷத்தைக் காட்டினும் தன் சுற்றத்தார்க்காக அடையும் துயரம் அதிகமாகவே யிருந்தது.

ஜெயசிங் அவளைநோக்கி "அம்மா! நான் கூறியபடி அவர்கள் சிறைசெய்யப்படும் விவகாரம் இரகசியமாகவும் சற்றும் குழப்பமில்லாமலுமே நடந்தது. உன் தந்தை எங்க ளோடுகூட வருமுன் உன்னைக்காண விரும்புகிருர். நீ வரு கிருயா?" என்ருன்.

இராஜாமணி:—"ஆனுல் என்...என் கணவர்? அவர் எங்கே? கூடத்தில் நிச்சயமாய் அவர் காலடிச் சத்தத் தைக் கேட்டேன்...." என்ருள்.

ஜெயசிங்:—"உன்கணவர் உன் தந்தையும் தமையனும் இருக்கும் அறையிலிருக்கிருர். அவர் விருப்பத்தின் படிதான் நான் உன்னை வந்தழைக்கிறேன்" என்ருன்.

அம்மொழிகளைக் கேட்டதே அவள் முகத்தில் ஒரு விதப் பிரகாசம் உண்டாகியது. அச்சமயம் அவள் மனதில் அனேக விஷயங்கள் கிளம்பின. அவள் மனேநிலைமை நாம் இன்னதென்று விவரிக்கக்கூடிய நிலைமையிலில்லை. அவள் பார்வை தன் கணவனிருக்கும் அறையின்மேல் நாட்டப் பட்டது. மனம் அங்கும் தன் தந்தையும் தமையனும் இருக்கும் இடங்கள் மேலும் அலைந்தது. அதனுல் அவள் பிரமையடைந்தவள் போலும் உன்மத்தம் பிடித்தவள் போலும் மரம்போல் அசைவற்று நின்ருள்.

ஜெயசிங்:—"நீ வரமாட்டாயா?" என்ருன். அவள்

"நான் என் தந்தையைக் காணவருவேன். ஆனால்... ஆனால் ..." என்று முணமுணத்தாள்.

மறுவிநாடி அவள் நடுங்கிக்கொண்டே பின்னிடைந்தாள். ஏனெனில் அச்சமயம் யாரோ அங்குவரும் காலடிச் சத்தம் கேட்டதும், மறுநிமிடம் பூபாலப்பிள்ளை அறைக்குள் வந்தார். இராஜாமணி "ஆ! என்கணவர் ..." என்றாள். அதற்குமேல் பேச அவளுக்கு வாய்வரவில்லை உண்மையில் அவள் தன் கணவன்மேல் சத்தியமான அன்புடையவள். அதனால் தன் கணவனைவிட்டுப் பிரிந்தது அவள் மனதிற்குப் பெரிய வேதனையாகவே யிருந்தது. தன் கணவன் கௌரவம் பொருந்திய குடும்பத்தில் பிறந்தவனென்றும் இப்போதும் கௌரவமான நிலைமையி லிருக்கிறானென்றும் அவள் நன்றாக உணர்ந்து கொண்டாள். அதோடு தன் குடும்பம் தாழ்ந்த நிலைமையிலுள்ள தென்றும் அதனினும் தன் தந்தையும் தமையனும் நடந்து கொண்டமாதிரியால் அத்தகைய குடும்பத்தில் பிறந்த பெண்ணை மணம்புரிந்த சங்கதி வெளிவந்தால் தன் கணவனுக்கு மிக்க அகௌரவம் நேரிடுமென்றும் அவள் நன்றாக உணர்ந்துகொண்டாள். இக்காரணங்களால் தன்னைப் பூபாலப்பிள்ளை மணம்புரிந்த சங்கதியே வெளிவராமலிருப்பதே மிக்க நலமென்பது அவள் அபிப்பிராயம். இக்காரணங்களால் தன்கணவன் அறைக்குள் வந்ததைக்கண்டதே யென்ன கூறுவதென்று ஒன்றும் தோன்றாமல் இராஜாமணி பிரமையடைந்து நின்றாள்.

பூபாலப்பிள்ளை:—"நீ பேசாமலிருப்பது நியாயமே. நானே முதலாவதாக என் சமாதானங்களைக் கூறி யுன் மன்னிப்பைப் பெறவேண்டும்" என்றார்.

இராஜாமணி:—"இல்லையில்லை. தாங்கள் இங்கு வந்ததே

போதுமானது. அப்படித் தங்களுக்கு என்மேல் வெறுப்பிருந்தால்..." என்றதே,

பூபாலப்பிள்ளை மனம்பதைத்து "என்ன என்ன? வெறுப்பா?- எனக்கு உன்மேல் வெறுப்பா? இராஜாமணி! நீ என்மனைவி. கடவுள் முன்னிலையில் நான் விதிப்படி மணம்புரிந்தமனைவி. இப்படி யமைந்ததற்காக நான் எவ்வளவோ சந்தோஷமடைகிறேன். என் பூரண அன்பையும் என் வாழ்நாள் முழுமையும் உள்ள சுகத்தையும் என் செல்வத்தையும் யாவையும் உனக்கு அற்பணம் செய்யவே இப்போது இங்கு வந்தேன். நீ இதுகாறும் என்மேல் பூரண அன்பையே வைத்திருந்தாய். இப்போது என்னை மன்னித்துவிடு. உன் அன்பே எனக்கு வேண்டியது" என்று தன் கரத்தை நீட்டினார்.

அவர் மொழிகளைக் கேட்டதே அவள் முகத்தில் சந்தோஷமானப் பிரகாசம் உண்டாயிற்று. அவள் மனம் பூரித்தது என்று அவள் முகக்குறியால் தெரிந்தது. ஆயினும் அவள் தன்கரத்தை யவரிட மளிக்கவில்லை. அவரை நோக்கி "தாங்கள் இச்சமயம் இதைக் கூறுகிறீர்கள். என் தந்தையும் தமையனும் கரங்கள் கட்டப்பட்டு கள்ளர்கள் என்று பகிரங்கமாய்ச் சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்படும் சமயத்தில்—அதோடு இத்தகைய அவமானமான தண்டனைக்கு அவர்கள் பாத்திரவான்களே யென்றும் நான் அவர்கள் சுற்றத்தாளென்றும் நன்றாகத்தெரிந்திருந்தும் இம்மாதிரி கூறுகிறீர்களா?" என்றாள்.

பூபாலப்பிள்ளை:—"எனக்கு அவர்கள் நடக்கைகளைப்பற்றி அக்கறையில்லை. நான் மிக்க வியாகுலத்தோடு தேடிக் கொண்டிருந்த என் அன்பார்ந்த மனைவி யகப்பட்டதே யெனக்கு விசேஷம். இப்போது அவளை யன்

போடு ஏற்றுக்கொண்டு பாதுகாப்பதே என் ஆவல்'' என்றார்.

இராஜாமணி:—“இப்போது என்ன வந்தாலும் வரட்டும். நான் மறுபடி துயரத்தை யனுபவிக்க லாகாது,'' என்று தலைகுனிந்தபடி தாழ்ந்த குரலாய்க் கூறினாள். ஆனால் மறுவிநாடி நிமிர்ந்து நின்றாள். அவளிடம் ஒரு புதுமாறுதல் உண்டாயிற்று. உடனே பூபாலப்பிள்ளையை நோக்கி,

“என்கணவரே! நீர் மிக்க நல்ல உள்ளமுடையவர். எவ்வளவு நல்லவரென்பது எனக்குத்தான்தெரியும். நான்றான் அதை யறியக்கூடும். நான் கடந்த ஒருவருடமாக உமது வீட்டிலிருந்து அங்கு நடக்கும் எல்லாவிவகாரங்களையும் கவனித்தேன். தாங்கள் ஆதிமுதல் எத்தகைய அந்தஸ்தில் இருந்து வருகிறீர் என்பதை நன்றாய் அறிந்துகொண்டேன். தங்கள் குடும்பப் பெருமையைச் சரியாகவுள்ளபடி யுணர்ந்து கொண்டேன். ஆனால் தங்கள் நற்குணத்தால் பின்னால் தாங்கள் ஆயுள் முழுமையும் துயரப்படும்படியான காரியத்தைச் செய்யலாகாது.

தாங்கள் அப்படிச் செய்யாவிட்டால், ஏழ்மை நிலைமையில் இருந்து அதன்பயன்களை யனுபவித்திருக்கும் நான் இரண்டுபேர்களுக் குரிய தைரியத்தைக் காட்டவேண்டி யிருக்கிறது. காட்டுவேன். பின்னால் தங்களுக்கு அவமானத்தையும் வியாகுலத்தையும் உண்டாக்கத்தக்க காரியத்தில் பிரவேசிக்கும்படித் தங்களை யொருபோதும் விடமாட்டேன். தாங்கள் என்னைத் தங்கள் மனைவியாய் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வீர்கள் என்பது உண்மையே. ஆனால் அதனுல் எத்தகைய துயரத்தை யேற்றுக் கொள்கிறீர்கள் என்பதை யுணர்கிறீர்களா?'' என்றாள்.

பூபாலப்பிள்ளை:—“ஆகா நான் உணர்கிறேன். ஆனால்

துயரத்தை யேற்றுக்கொள்வதாய் நான் உணரவில்லை. என் மனவேதனை யொழிந்த தென்பதையே நான் உணர்கிறேன்" என்றார்.

இம்மொழிகளைக் கேட்டதே இராஜாமணியின் மனம் மிக்க வேதனை யடைந்தது. மனோவேதனையால் அவள் புருவங்கள் நெளிந்துகொண்டு திகைப்படைந்தவள் போல் நின்றாள். தன் சம்பந்தத்தால் தன் கணவனுக்குப் பின்னால் அகௌரவத்தால் மனவருத்தம் நேரிடலாகா தென்பதே அவள் எண்ணம். தன்தந்தை தமையன் இவர்கள் நடக்கையால் தன் உத்தமகுண முடைய புருடனுக்கு வியாகுலம் நேரிடலாகா தென்பதே அவள் பிரியம்.

---

## 21—வது அத்தியாயம்.

இராஜாமணி அவர் அருகில் சென்று, தாங்கள் கூறுவதும் ஏற்றுக்கொள்வதும் என்ன தெரியுமா? பூர்வீக முதல் கௌரவத்தோடு வாழ்ந்த குடும்பத்திற்கு நீங்காத அவமானம், குற்றம் பொருந்திய அகௌரவ நடக்கைகளை மறைத்து வைத்துக்கொண் டிருக்கவேண்டிய கஷ்டம், எதிர் காலத்தில் நெடுநாட்கள் வரையில் சிறைச்சாலை சம்பந்தமான விஷயங்கள் நினைவிற்கு வராமலும், அதைப்பற்றிப் பேசாமலும் எச்சரிக்கை யெடுத்துக்கொள்ளவேண்டிய கஷ்டம், அன்பார்ந்த சதி புருடர்கள் இருவரும் சம்பாஷிக்கையில் சில விஷயங்களைப்பற்றிப் பேசாமல் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். தந்தைக்கும் புத்திரிக்கும் தமையனுக்கும் தங்கைக்கும் இருக்கவேண்டிய அன்பின்படி அப்போதைக் கப்போது உண்டாகும் நினைவை வெளியிடாமல் மனவேதனைப்பட வேண்டும். அதைப்பற்றிய சங்கதிகள் வாயினின்றும் வெளிவர

லாகாது. நான் உண்மையைக் கூறுகிறேன். கடவுளே என்னை மன்னிக்கவேண்டும். இயற்கையாய் நமக்குள்ள பரிசுத்தமான எண்ணங்களையும், சிந்தனைகளையும், சம்பாஷணைகளையும் மறைத்து வைத்துக்கொண் டிருக்கவேண்டும்.

மனதில் கொடிய விஷம் பொருந்திய நரகமென்று கொண்டிருப்பதுபோன்ற வேதனையை யனுபவித்துக் கொண்டிருக்கும் மனைவி எப்போதும் பிறப்பிலிருந்து தான் அனுபவித்துக்கொண்டிருந்த பெருமை கௌரவம் முதலியவற்றை யிழந்துவிட்ட புருடன்—இன்னும் மக்கள்—ஆம்—மக்கள் உண்டாகலாகும். எப்படிப்பட்ட மக்கள்? பெருமையோடு நினைக்கவேண்டியதும், கூறவேண்டியதும், பேசவேண்டியதுமான பாட்டன், அம்மான் என்ற வார்த்தைகளை நினைக்கக்கூடாத மக்கள். அப்படி அவர்களைப் பற்றிய சங்கதியைக் கேட்டால் அம்மக்கள் நாணத்தோடு தலை குனியவேண்டும். அவர்கள் மதலைச் சொற்களால் பெற்றோரடையும் சந்தோஷமனைத்தும் எள்ளளவிற்கும் பயன்படாமற்போம்.'' என்றாள்.

பூபாலப்:—“இராஜாமணி! உன் தந்தையும் தமையனும் தங்கள் மனப்படிச்செல்லவேண்டிய வழியில் செல்வதாகவும் நம்மைப்பற்றி யெவ்விதப் பிரஸ்தாபமும் செய்வதில்லையென்றும் ஒப்புக்கொண்டார்கள். உன் விஷயத்தில் அதாவது நமது விஷயத்தில் இனிப் பிரவேசிப்பதில்லையென்று கண்டிப்பான வாக்களித்துவிட்டார்கள். நீ கூறுகிறபடி அவர்களைப்பற்றிய சிந்தனை யுன் மனதிலிருக்குந்தான். ஏனெனில் அவர்கள் உன் நெருங்கிய சுற்றத்தார்கள். அதிலும் தந்தையும் தமையனுமாகவிருக்கிறார்கள். ஆகையால் நீ யவர்களைப்பற்றிய விஷயங்களை மறக்க முடியாது. ஆனால் இவ்விஷயம் நமது குடும்பத்தில் இடையூறை

யுண்டாக்கவேண்டிய அவசியமேயில்லை. நீ எங்கிருந்து வந்து என்னை மணம்புரிந்து கொண்டாயென்றும், நீ கள்ளரென்று சிறையிலிருக்கப்பட்டவர்களுடைய சுற்றத்தாளென்றும் ஒருவரும் அறியவேண்டியதே யில்லை. ஒருகாலும் அறியமாட்டார்கள். ஆகை யால் நீயும் கடந்த விஷயங்களையும் நாம் அனுபவித்த துயரத்தையும் கருதி, அதற்கு ஈடு செய்வதற்காகத் தயவு செய்து ஒரு காரியம் செய்யலாகாதா? அதா வது நீ அத்தகைய மனிதர்களின் சுற்றத்தாள் என் பதை மறந்திருக்கலாகாதா? அதனால் என் மனதிற்கு நிம்மதியை யுண்டாக்கலாகாதா?'' என்றார்.

யாவும் கேட்டபின் அம்மாது "என் அன்பார்ந்த கணவரே! நான் எத்தகைய புத்தியும் தைரியமும் உடை யவளாயினும் கடைசியில் ஒரு ஸ்திரீயே. எப்படியிருந்தா லும் பெண்கள் மனம் பலமுடையதல்ல. நான் அன் பான மொழிகளால் மனவிளக்கமடைந்து விடுவேன். அது என்போன்ற மாதர்க்கு இயற்கையேயாகும். ஆனல் ஒரு விஷயத்தில் மட்டும் நான் மிக்க தைரியமுடையவ ளாகவிருக்கிறேன். அதாவது, நான் கௌரவப்படுத்த வேண்டிய மனிதர்க்கு—அதாவது என் கணவருக்கு— என் கடமையினின்றும் தவருமலிருக்கவேண்டிய விஷயத் தில் மட்டும் நான் பூரண தைரியமுடையவளாக விருப் பேன். சுமார் பதினேரு மாதங்களுக்குமுன் நான் உங்களை விட்டுப் பிரிந்தேன். ஏனெனில் நீங்கள் அவ்வாறு கோரிய தோடு என் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் அப்படிச் செய்யவேண்டியிருந்தது. இன்று என் சந் தோஷம் முழுமையும், தாங்கள் எனக்களிக்கும் செல்வம் பொருந்திய அந்தஸ்தையும் யாவற்றையும் நிராகரித்து விடச் சித்தமாயிருக்கிறேன். ஏனெனில், நீர் இருக்க

வேண்டிய கௌரவமான பதவியும், நீர் அனுபவிக்கவேண்டிய சுகமும் என்னை யவ்வாறு செய்யும்படி கட்டாயப் படுத்துகின்றன" என்றாள்.

பூபாலப்:—இராஜாமணி! என் வாழ்நாட்களின் சந்தோஷத்தைப்பற்றியா கூறுகிறாய். நீ மட்டும் நான் உன்னை யெம்மாதிரி காதலித்திருக்கிறேன் என்பதை மட்டும் அறிவாயாயின்—" என்றதே,

இராஜாமணி:—"நான் ஒரு சமயம் இணங்கி விடலாம். ஆனால் நான் உம்மை யொரு பெண் காதலிப்பது போல் காதலிக்கிறேன். எத்தகைய பெண்? நினைத்தாலும் தேகமும் மனமும் நடுங்கும்படியான இடத்திலிருந்து சொல்லொணா மன வேதனையடைந்து கொண்டு அகௌரவம் அவமானங்களால் துயரப் பட்டுக்கொண்டிருந்த ஒரு பெண் முதல் முதல் தன் மனதிற்குச் சந்தோஷத்தையும், சுகத்தையும் நிம்மதியையும் செல்வத்தையும் கொடுத்த ஒருவர்மேல் எத்தகைய அன்புவைக்கவேண்டுமோ அத்தகைய அன்பு தான் நான் தங்கள் மேல் வைத்திருக்கிறேன். அத்தகைய கருணைக்கு நான் பதில் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்" என்றாள்.

பூபாலப்பிள்ளை உன் தந்தை தமையன் இவர்களது நடக்கைகளால் எனக்கு அகௌரவமுண்டாகுமென்று நீ அஞ்சுவதாகக் கூறுகிறாய். இருக்கட்டும், நீ என்னை மணம்புரியும்போது உன் தந்தையும் தமையனும் இப்படிப்பட்டவர்கள் என்று தெரிந்திருந்து தானே மணம் செய்துகொண்டாய். இப்போது அதைப்பற்றி யேன் அஞ்சவேண்டும்.

இராஜாமணி:—"ஆம். ஆம். அது உண்மையே. அச்சமயம் காதல் என் கண்களை மறைத்து விட்டது. மேலும்

அப்போது என் தந்தையும் தமையனும் தண்டனை யடைந்த குற்றவாளிகளாக ஆகியிருக்கவில்லை. பணத்தால் தூண்டப்பட்டுக் குற்றமான காரியங்களைச் செய்துகொண் டிருந்தார்கள். அத்தகையவர்களை யெப்போது விட்டுப் பிரிந்துயிடலாமோவென்று என்மனம் ஆவல் கொண்டிருந்தது. உம்மை மணம் செய்துகொண்டதே அவர்களை யடியோடு விட்டுப் பிரிந்து விட்டோம். இனி யவர்களை நாம் காணமாட்டோம் என்று கருதியிருந்தேன். இத்தகைய சம்பந்தங்கள் அப்படிச் சுலபத்தில் கத்தரித்துக்கொள்ளத் தக்கவை யல்லவென்று தெரிகிறது. அவர்கள் என்னைக் கண்டுபிடித்து விட்டார்கள். மறுபடி கண்டு பிடிப்பார்கள்—" என்றபோது.

பூபாலப்பிள்ளை:—"இல்லையில்லை ஒருபோதுமில்லை. நான் அதைப்பற்றி ஜாக்ரதை யெடுத்துக் கொண்டேன். உன்வரையில் பூமிவெடித்து அவர்களை விழுங்கிவிட்ட மாதிரியே." என்றார்.

மனைவி:—"ஆயினும் இதனாலுண்டாகத்தக்க அவமானம்? அதைத்தாங்கள் கவனிக்கவில்லை போலும் அது இருக்கவே யிருக்கிறது. அது இருக்குமட்டும்; நான் எங்கிருந்தால் அது என்னைமட்டுமே தாக்குமோ, தங்களைத் தாக்காதோ, அங்குதான் நான் இருக்க வேண்டும். நான் உங்களை அதிகமாக விசுவாசிக்கிறேன். தங்களைவிடக் கடவுள்கூட எனக்கதிகமல்ல. இந்த அவமானம், என்னை விட்டொழியுமட்டும் நான் தங்கள் மனைவியென்று கூறிக்கொண்டு தங்களருகில் வரமாட்டேன். மிக்க யோக்கியதையும் கௌரவமும் உயர்ந்த அந்தஸ்தும் உடைய ஒரு பெரிய சீமாட்டிகூடத் தங்கள் மனைவியாயிருக்கத்

தாழ்ந்தவளே யாகும். தங்கள் இனிய குணங்களையும் அன்பையும் என்மனதில் வைத்துக்கொண்டு நான் எங்கேனும் ஒரு இடத்தி லிருந்துகொண்டு நற்காரி யங்களைச் செய்துகொண்டு என் வாழ்நாட்களைக் கழித்துக்கொண் டிருக்கவேண்டியதே என்கடமை யென்று கருதுகிறேன்" என்றாள்.

அவள் அவ்வாறு கூறிவிட்டு உடனே தன் தந்தையும் தமையனும் இருக்கும் அறைக்குச் சென்றாள். பூபாலப் பிள்ளை அவள் கூறியயாவும் பேசாமல் கேட்டுக்கொண்டே யிருந்தவர் அவள்சென்றதே திடுக்கிட்டவர்போல் "சேசே! இது நம்மால் சகிக்கக்கூடியதல்ல. இவள்-இவள் என் மனோ நிலைமையைச் சற்றேனும் அறிந்து கொள்ளவில்லை. ஆம் சற்றும் அறிந்து கொள்ளவில்லை. அவள் மனதில் தோன் றிய விஷயங்களை மட்டுமே கருதி அவற்றையே பாராட்டிக் கொண்டு ஒருபேய்க்கு அஞ்சுகிறவள்போல் அஞ்சுகிறாள்" என்று கூறிவிட்டுப் பக்கத்திலிருந்த ஜெயசிங்கை நோக்கி "அய்யா! தயவுசெய்து எனக்கொரு உதவிசெய்ய வேண் டும்" என்று கூறிக்கொண்டே தமது ஜேபியிலிருந்து ஒரு துண்டுக்கடிதத்தை யெடுத்து அதில் ஏதோ சிலவார்த்தை களை யெழுதி மடித்து, அக்கடிதத்தை ஜெயசிங்கினிடம் கொடுத்து, இதை என் வீட்டிலிருக்கும் தங்கம்மாளிடம் சேர்த்துவிட வேண்டும்" என்றார்.

ஜெயசிங் அக்கடிதத்தை யுடனே தன் ஆட்களில் ஒரு வனிடமளித்துத் தங்கம்மாளிடம் கொடுக்கும்படி கூறிவிட் டுப் பூபாலப்பிள்ளையிடம் சங்கதியைத் தெரிவித்தான். அவர் "நான் எவ்வளவுகூறினாலும் அவளுக்கு என்மனோ நிலைமை தெரியவில்லை. ஒரு சமயம் தன்போன்ற ஒரு ஸ்தி ரீயே கூறினால் அப்போது அது அவள் மனதிற்கு விளங்க

லாகும் என்று கருதியே தங்கம்மாளை யுடனேவரும்படி எழுதினேன்" என்றார்.

அதன்பிறகு பூபாலப்பிள்ளை தமது மனதிலுள்ள வேதனையைச் சகிக்கக்கூடாதவராய் அந்த அறையில் முன்னும் பின்னுமாய் திரிந்துகொண் டிருந்தார். ஜெயசிங் இனி நாம் இவரருகில் இருக்கலாகாதென்று கருதி இராஜாமணி சென்ற கள்ளரிருக்கும் அறைக்குச் சென்றான்.

ஜெயசிங் அந்த அறைக்குள் செல்லும்போது அங்கிருக்கும் ஆனந்தசிங் சாளரத்தில் நின்றுகொண்டு ஜாடையாய் வெளியில் பார்ப்பவன்போ லிருந்தான். ஜெயசிங் அவனருகிற் சென்றான். அச்சமயம் இராஜாமணி தன் தந்தையை நோக்கி "என்தேகத்தில்உன்னுடைய இரத்தமும் மகா உத்தமியாகிய என் தாயின் இரத்தமும் ஓடுகிறதென்பதை நான் ஒருபோதும் மறக்க முடியாது. என் தலையெழுத்து எப்படியிருந்தாலும் சரி, நீங்கள் உங்கள் நடக்கைகளால் கவிழ்ந்து கொள்ளும்படிச்செய்த என் சிரசையுலகில் எந்தமூலையில் மறைத்துக்கொண் டிருந்தாலும், உங்கள் பாபத்திற்காக உங்களை மன்னிக்கவேண்டுமென்றும் இனியேனும் நீங்கள் நன்னெறியில் நடக்குமாறு உங்களுக்கு அருள் புரியவேண்டுமென்றும் சர்வஜீவதயாபரராகிய ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டே நான் எப்போதும் உன் ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமென்று எண்ணி யிருப்பேன்" என்று கூறினாள்.

இன்னொரு தந்தையாக விருந்தால் அவன் என்னதான் கள்ளனாக விருந்தாலும் மனங்கனிந்து கண்ணீர் விட்டிருப்பான். ஆனால் அடவியிலுள்ள துஷ்டமிருகத்தினும் கொடிய சுபாவமுடைய அம்முரடனோ அப்போதும் ஒரு அடியுண்ட வேங்கைபோல் உறுமினானேயன்றி அவள் வார்த்தைகள் அவன் மனதிற் படவேயில்லை. அச்சமயம்

அவன் கரங்கள் அவன் சுயாதீனத்திலிருந்து ஆனந்தசிங்கும் ஜெயசிங்கும் அருகிலில்லாதிருந்தால் அத்துஷ்டன் அவளுக்குத் தீங்கிழைத்தே யிருப்பான் என்பதிற் சந்தேகமேயில்லை. அவன் உளறியதைக் கேட்டதே ஆனந்தசிங் கோபமடைந்து தன் ஆட்களை யழைத்து அக்கள்ளரைப் பிடித்துச் செல்லும்படி கட்டளையிட்டான். அவர்களைப் பிடித்துக் கொண்டு போகும்போது இராஜாமணி பேசாமல் நின்றுபார்த்துக்கொண் டிருந்தாள். ஆனால் கடைசில் அவர்கள் சென்று கதவு மூடப்பட்டபின் அவள் முகத்தில் ஒருவிதத் தீர்மானமான குறி தோன்றியது. அப்போது அவளும் ஜெயசிங்கும் மட்டுமே அங்கு நின்றுகொண்டிருந்தார்கள். வானத்திலுள்ள சத்தமேகங்களும் குமிறி இடிக்கும் என்று எதிர்பார்ப்பவள்போல் ஒருவித தீரத்தோடு நின்றாள். தன் கணவர் வருவாரென்றும், தான் அவர் கோரிக்கைக்கு எவ்வளவு மறுத்துக் கூறினளோ அவ்வளவுக்கவ்வளவு அவர் தமது எண்ணத்தில் துணிகரம்கொண் டிருக்கிறரென்றும் அவள் உணர்ந்தே ஒருவிதத்தீர்மானத்தோடு நின்றாள்.

அவள் நெடுநேரம் காத்திருக்க வேண்டியிருக்கவில்லை. கள்ளர்களைப் போலீஸார் அழைத்துச் சென்றபின் தெருக்கதவு மூடப்பட்டதே பூபாலப்பிள்ளையும், தங்கம்மாளும், இன்னொருமாதும் அறைக்குள் வந்தார்கள். அந்த மாது மேல் போர்வையும் தடித்த முகமூடியும் அணிந்துகொண் டிருந்தபோதிலும் அவள் உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் ஒரு சீமாட்டி யென்று தெரிந்தது. அவள் கம்பீரமான தோற்ற முடையவளாகவிருந்தாள். அவள் பங்கஜம் என்ற மார்த்தாண்டம் சீமாட்டியே.

இவர்களைக் கண்டதே இராஜாமணி மிக்க வியப்பால் திடுக்கிட்டு விட்டாள். "ஆ! தங்கம்மாள்!" என்று

அவளைநோக்கித் தன் கரத்தை நீட்டினள். தங்கம்மாள் அவள் கரத்தை யாவலோடு பற்றிக்கொண்டு, "என் அன் பார்ந்த எஜமாட்டியே! ஆ! உங்களை மறுபடி சுகமாகவும் க்ஷேமமாகவும் காண்பது என் மனதிற்கு மிக்க ஆனந் தத்தை யளிக்கிறது" என்று மிக்க அன்போடு மொழிந் தாள்.

இராஜாமணி அம்மாதை நோக்கி "நீ என் க்ஷேமத் தைப்பற்றிக் கொண்டிருக்கும் ஆவலை நான் அலக்ஷியமாகக் கருதியிருப்பேனென்று எண்ணியிருப்பாய். உண்மையில் உனக்குச் சமாசாரம் அனுப்பக் கூடிய நிலைமையில் நானில்லை. அப்படி நான் செய்யத் துணிந்தாலோ யாரு டைய நன்மைக்காக வீட்டைவிட்டு வந்து இத்தகைய துன்பங்களை யனுபவித்துக்கொண் டிருக்கிறேனோ அவ ருக்கே கெடுதி செய்வதாக முடியும். அதாவது நான் விட்டு வந்த வீட்டின் எஜமானுடைய க்ஷேமத்திற்கும் உயிருக்குமே ஆபத்தாய்முடியும்போலிருந்தது" என்றாள்.

பூபாலப்பிள்ளை யதைக் கேட்டதே "ஆ! என்ன சங்கதி யது? என்னைக் காப்பாற்றுவதற்காகவா நீ என் வீட்டைவிட்டு அவர்களோடு கூடச் சென்றாய்?" என்றார். இராஜாமணி "ஆம் வேறெந்தக்காரணம் என்னை யவ்வாறு செய்யத் தூண்டும்? அவர்கள் என்னைக் கொன்றுவிடுவ தாயினும் நான் சட்டை செய்யமாட்டேன். ஆனால் அவர் கள் தங்களுக்குத் தீங்கிழைப்பதாய்ப் பயமுறுத்திய போது..." என்றதே,

தங்கம்மாள் தன் எஜமானியின் கரத்தைப்பற்றிக் கொண்டு, இராஜாமணியின் வலதுகரத்தில் மணிக்கட்டிற்கு மேல் சற்று தூரத்திலிருந்த ஒரு வடிவைக்காட்டி "அம்மா

இதென்ன இது? நான் கடைசியாக உன்னைக்கண்டபோது இது இல்லையே" என்றாள்.

இராஜாமணி மெதுவாக "ஆம் இல்லை. நானே என்னைக் கொஞ்சம் காயப் படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. அது கிடக்கிறதுபோகட்டும்" என்றான்.

பூபாலப்—"இல்லை. இராஜாமணி! அதை யப்படி விட்டு விட ஒருபோதும் முடியாது. நான் இதைப்பற்றி மட்டுமல்ல—அன்று நீ என் வீட்டைவிட்டுச் சென்ற இரவு நடந்த சங்கதிகள் யாவும் பூரணமாக அறிய வேண்டும். நீ அடைக்கலம் புகுந்திருந்த விடத்தில் வந்து அவர்கள் உன்னை யெப்படிக் கண்டுபிடித்தார் கள்? நீ யிங்கிருப்பது அவர்களுக்கெப்படித் தெரிந் தது? இவையாவும் நானறிய வேண்டும்" என்றார்.

அதன்மேல் இராஜாமணி மிக்க மனவருத்தத்தோடு பின்வரும் சமாசாரங்களைக் கூறத் தொடங்கினாள்:—

அவர்கள் முதலில் தங்கள் வீட்டிற்குள் வந்தபோது நான் அங்கிருக்கிறேனென்று தெரிந்தேனும், நான் தங்களை மணம் புரிந்து கொண்டதை யறிந்தேனும் வந்தவர்களல்ல. அவர்கள் எப்படியோ தாங்கள் செல்வவானென்றும் தங்கள் வீட்டில் அதிக பொருளிருக்குமென்றும் தெரிந்து கொண்டார்கள். அதற்குமேல் வீட்டை வந்து பார்த்தார் கள். புதிதாகச் சேர்க்கப்படும் கட்டிடத்தினருகில் ஏணி யிருப்பதைக் கண்டதே, ஆ இவ்வழியாக வீட்டிற்குள் சுலபமாக நுழையலா மென்று அவர்களுக்குப் புலப் பட்டது. பண ஆசை யவர்களைத் தூண்டி யுற்சாகமளித் தது.

கடைசியில் அவர்கள் தங்கள் வீட்டில் கொள்ளை யடிப்பதற்கே யங்கு வந்தார்கள் என்று எனக்கு நன்றாகப் புலப்பட்டுவிட்டது. இதற்காகவே யவர்கள் தங்கள்

வீட்டிற்கு எதிர் வாடையிலிருக்கும் ஒரு வீட்டில் ஒரு அறையைச் சில நாட்களுக்கு முன்பே வாடகைக்கு எடுத்துக்கொண்டு தாங்கள் களவாடக் கருதிய வீட்டின் விஷயங்களைப் பற்றிக் கவனித்து வந்திருக்கிறார்கள். அச் சமயம் அவர்கள் கையில் காசில்லை. ஆனால் தாங்கள் பார்த்த அத்தனி வீட்டில் ஒரு இடத்தில் கொஞ்சம் பணம் புதைத்து வைத்திருந்தார்கள். ஆயினும் அச்சமயம் அவர்கள் அங்குச் செல்வது ஆபத்தாயிருந்தது. பிறகு என் தமையன் அங்குப்போய் வந்ததாகத் தெரிகிறது. வேறு வழியில்லாமல் அப்படிச் செல்ல நேர்ந்தது.

அன்று அவர்கள் தங்கள் வீட்டிலிருந்த ஏணிவழியாக ஏறி நான் இருக்கும் அறையின் சாளரத்தினருகில் வந்து நின்றதும் என்னைப் பார்த்துவிட்டார்கள். நான் எப்போதும் படுக்கைக்குச் செல்லுமுன் விளக்கைத்தூண்டி விட்டுச் சாளரத்தின் திரையைத் தொங்க விட்டுவிடுவது வழக்கம். பிறகு படுத்துக்கொள்ளும் போது தான் தீபத்தை யிறக்கி விடுவது வழக்கம். அன்று வழக்கம் போல் திரையை விட்டுவிட்டுப் படுக்கைக்குச் செல்லுமுன் கூந்தலைச் சீவிக்கொண்டிருந்தேன்.

இவர்கள் ஏணிவழியாக வேறிவந்ததும் என் அறையின் சாளரத்தருகில் நின்று மெதுவாகத் திரையைக் கொஞ்சம் விலக்கிப் பார்த்தார்கள் நான் அங்கிருப்பதைக் கண்டு விட்டார்கள். உடனே ஆலோசனை செய்யலானார்கள். அப்போது நான் அங்கு என்ன நிலைமையிலிருக்கிறேனென்று அவர்களுக்குத் தெரியாது. ஏதோ வொருவித வேலைக்காரி நிலைமையிலிருக்கிறேனென்றே யெண்ணிக் கொண்டார்கள். ஆயினும் தங்கள் காரியம் நிறைவேறுவதற்கு என்னை யொரு அனுகூலமான கருவியாக உப

யோசித்துக் கொள்ளலாம் என்றுமட்டும் தீர்மானித்துக் கொண்டார்கள்.

அவர்கள் உடனே எனக்குச் சமிக்கை காட்டித் தாங்கள் பயமின்றித் தாராளமாக உள்ளே வருவதற்காக உடனே தீபத்தை யணைத்து விடும்படி எனக்குக் கட்டளை யிட்டார்கள். அந்தோ கடவுளே! அவர்கள் காட்டிய பயங்கரமான சமிக்கை யெனக்கு இப்போதும் என் எதிரில் இருப்பதுபோல் தோன்றுகிறது. அச்சமயம் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. இவர்கள் நாம் இருக்கு மிடத்தைக் கண்டு பிடித்து விட்டார்களே என்பதே யெனக்குப் பெருந்திகிலையும் மனக் குழப்பத்தையு முண் டாக்கி விட்டது. இவர்கள் நம்மிடம் ஏதேனும் ஆலோ சனை செய்ய அல்லது நமது உதவியைக்கோர வந்தார்க ளாக்கும் என்றே யெண்ணினேன். ஏனெனில் அச்சமயம் அவர்கள் என் இருப்பிடத்தை யறிந்து என்னைக் காணவே வந்தார்கள் என்று நான் எண்ணிக் கொண்டேன். இவர் கள் களவாட வந்தசங்கதி பிறகே எனக்குத் தெரிய வந்தது. ஆகையால் அவர்கள் கோரியபடி தீபத்தை யணைத்து விட்டேன்.

அவர்கள் உடனே அறைக்குள் வந்து நின்றார்கள். நான் எடுத்ததே "என்னத்திற்காக இங்கு வந்தீர்கள்? என்று கேட்டேன். அவர்கள் என்னை யுற்றுநோக்கினார் கள். அதன்மேல் நான் என்ன பேசுகிறேன் என்பதை யுணராமலே,

"நீங்கள் இப்படி இரவில், அகாலமான இந்நேரத்தில் அதிலும் தரையிலிருந்து சுமார் ஐம்பதடி உயரத்திலிருக் கும் சாளரத்தின் வழியாக இங்கு வருவானேன்? இது கள்ளத்தனமாக வருகிறமாதிரி யல்லவா? யாரேனும் பார்த்தால் உங்களைப்பிடித்து நீங்கள் தப்பித்துககொண்டு

வந்துவிட்ட சிறைச்சாலைக்கு மறுபடி யனுப்பி விடுவார்கள் என்று உங்களுக்குப் பீதியில்லையா?" என்றேன்.

அவர்கள் கூறியபதில் என்மனம் நடுங்கச்செய்தது, அப்போதுதான் அடடா நாம் இவர்களை யுள்ளே வரும்படி இடங்கொடுத்ததால் எத்தகைய முட்டாள் தனம் செய்து விட்டோம் என்று என்மனதிற் புலப்பட்டது. உடனே எனக்கு நடுக்கமுண்டாயிற்று. அவர்கள்,

"எங்களுக்கு வேண்டியது பணம். அதற்காகவே நாங்கள் இப்போதிங்கு வந்தோம். இப்போது நீ யிங்கிருக்கிறபடியால் எங்களுக்கு ஒரு பீதியுமில்லை," என்றார்கள்.

அம்மொழிகளைக் கேட்டதே நான் அலறிவிட்டேன். அவர்களோ அதைச் சட்டைசெய்யாமலே, நிதானமாய் "வீட்டிலுள்ளோர்க ளனைவரும் படுத்துக்கொண்டு சந்தடி யடங்குமட்டும் நாங்கள் பேசாம லிங்கேயே யிருக்கிறோம். அதன்பிறகு பூபாலப்பிள்ளை தன் வெள்ளிப்பாத்திரங்கள் முதலியவை, முக்கியமாக நகைகள் ரொக்கம் முதலியவை வைக்கப்படும் பெட்டி யிவைகள் இருக்குமிடத்தை நீ காட்டவேண்டும்" என்றார்கள்.

நான் ஒரு வேலைக்காரி யென்றே யவர்கள் எண்ணிக்கொண்டார்கள் என்று அப்போது எனக்கு நன்றாய்ப் புலப்பட்டுவிட்டது. சற்றுநேரம் வரையில் நான் அவர்கள் எண்ணிக்கொண் டிருப்பது போலவே நடித்துக்கொண்டிருந்தேன். ஆனால் நான் அவ்வாறு செய்ய மறுத்தபோது அவர்கள் முரட்டுத்தனமாக என்னைப் பிடித்து ஒரு புறமாகத் தள்ளிவிட்டு ஆவேசம் வந்தவர்கள்போல் படிகளி லிறங்கிச் செல்ல முயன்றார்கள். அப்போதுண்டான பயத்தால் நான் ஜாக்கிரதையை மறந்துவிட்டு மிக்க மனக்கலக்கத்தோடு 'அய்யோ! உங்கள் புண்ணியத்திற்கு

இந்த வீட்டிலிருப்பவர்களில் ஒருவருக்கும் எவ்விதத்துன்பமும் செய்யவேண்டாம். ஏனெனில் இது என்கணவன் வீடு' என்று வாய்தவறிக் கூறிவிட்டேன்,'' என்றாள்.

---

## 22—வது அத்தியாயம்.

பூபாலப்பிள்ளை முதலியவர்கள் கவனமாய் இராஜாமணி கூறுவதைக் கேட்டுக்கொண் டிருந்தார்கள். அவள் பின்னுங் கூறத் தொடங்கி,

"இது என் கணவன்வீடு என்று நான் கூறியதே அவர்கள் தட்டென்று திரும்பி என்னருகில் வந்தார்கள். என்னைப் பலகேள்விகள் கேட்டுக் கடைசியில் நடந்த சங்கதி முழுமையும் அறிந்து கொண்டார்கள். நான் என் இரகசியத்தை யவர்களிடம் சிக்கச்செய்தது பெரியமூடத்தனமான செய்கை. முட்டாள் தனமாக அப்போதுண்டான பீதியால் என்னை யறியாமலே என்வாயினின்றும் அது வந்துவிட்டது. உடனே அவர்கள் ஆலோசனை வேறு வழியில் திரும்பிவிட்டது. அவர்கள், விஷயங்களைத் துரிதமாகக் கிரகிக்கும் சூக்கும அறிவுடையவர்களல்ல. ஆயினும் இந்தவிஷயத்தில் எனக்கு உம்போடிருக்கும் சம்பந்தமாகிய இரகசியத்தைக் கொண்டு, தாங்கள் நல்ல பலனடையலா மென்று தீர்மானித்து விட்டார்கள்.

இதை வெளியிடுவதாய்க்கூறி என்னைப் பயமுறுத்தித் தங்கள் விருப்பத்தின்படி என்னை நடக்கச் செய்யலாமென்றும் தங்களுக்கு அவமான முண்டாக்குவதாகப் பயமுறுத்தித் தங்களிடம் பொருள் பறிக்கலாமென்றும் எண்ணி விட்டார்கள். முன்பு ஆவலோடுகேட்ட வெள்ளிப் பாத்திரங்களும் இரும்புப் பணப் பெட்டியும் இப்போது அவர்களுக்கு ஒரு துரும்பு போலாய் விட்டது. என்னை

வெளியி லழைத்துக்கொண்டுபோய் வைத்துக்கொண்டு தங்களிடம் பணம் பறிக்கக் கருதினர்கள். என் க்ஷேமத்தைக்கெடுத்து எனக்குத் தீராத்துயரை யுண்டாக்குவதையும், தங்கள் கௌரவத்தையும் அவர்கள் சட்டை செய்யும் உள்ள முடையவர்க ளல்ல. நான் நியாயப்படி தங்கள் மனைவியாய் இருக்கிறேன் என்பதே அவர்களுக்குப்போது மானது. அதிலும் நான் ஒரு கௌரவமும் செல்வமும் பொருந்திய மனிதனை மணம்புரிந்து கொண்டது அவர்களுக்கு ஒரு பெரும் புதையலகப்பட்ட மாதிரியாய் விட்டது

அவர்கள் தங்கள் துஷ்டத் தனமான அக்கிரம எண்ணத்தை என்னிடம் வெளியிட்டபோது நான் அடியோடு அதற்கு உடன்பட மறுத்துவிட்டதைக் கண்டு அவர்கள் மிகவும் வியப்படைந்து திடுக்கிட்டு விட்டார்கள். நான் என் காதலைப் பற்றியும் என் கணவனுக்கு நான் காட்ட வேண்டிய கடமையைப்பற்றியும் எவ்வளவோ கூறினேன். அவர்கள் இருப்பிடத்தை வெளியிடாவிடினும் அவர்களது தீய எண்ணங்களை வெளியிட்டு விடுவதாகக் கூறினேன். அவர்கள் பண ஆசைக்கு முன் என்வார்த்தைகள் எதுவும் அவர்கள் செவியிலேறவே யில்லை. இயற்கையில் அவர்கள் கல் நெஞ்ச முடையவர்கள். அதோடு பண ஆசை பிடித்துக் கொண்டால் எவ்வளவு துஷ்ட காரியத்தைத்தான் செய்யார்கள்.

நான் என்ன கூறியும் கேட்காமல் "நீ எங்களோடு கூட வந்தே தீரவேண்டும். உன் பிரியப்படி வராவிட்டால் பலவந்தப் படுத்தப்படுவாய்" என்று கூறியதோடு உடனே என்மேல் பாய முயன்று ஒரு நாற்காலியைப் புரட்டிவிட்டு திரைச் சீலையையும் கிழித்து விட்டார்கள். அத்திரைச் சீலையை நான் விடாமற் பற்றிக் கொண்டதால் அதைக்

கிழித்து விட்டார்கள். அப்போது தான் நான் இவ்வாறு என் புயத்தில் காயத்தை யுண்டாக்கிக் கொண்டேன். இத்தகைய பயமுறுத்தல்களுக்கு நான் அஞ்சுகிற ஆசாமி யல்லவென்று அவர்களுக்கு அறிவிப்பதற்காகவே நான் அவ்வாறு செய்தேன். என் இரத்தத்தை நானே சிந்திக் கொள்ளும்படியான தைரியம் எனக்கிருக்கிற தென்று அவர்கள் அறியும்படிச் செய்ய வேண்டு மென்பது என் கருத்து. "நீங்கள் இம்மாதிரி என்னிடம் வீண் மிரட்டல் களைக் காட்டுவதால் ஒரு பயனுமில்லை. அதனால் வீண்கால தாமதமே யன்றிவேறில்லை" என்றேன்.

அம்மொழிகளைக் கேட்டபின் அவர்கள் சற்று மன முடைந்தார்கள். தங்கள் பயமுறுத்தல்களை வேறு வழி யில் திருப்பினார்கள். அதனால் என் மனதில் பீதியுண்டா யினும் நான் அதை வெளியிற் காட்டலாகாதென்று எனக் குள்ளாகவே யடக்கிக் கொண்டேன். அதன்மேல் நான் என் உடைகளையும் மேல்போர்வையையு மணிந்துகொண்டு எனக்கு அவசியமான வஸ்துக்களை—அதாவது கலியாணக் கணையாழியையும், தங்கம்மாள் தபவாய் என்னிடமளித்த தங்கள் திருவுருவப்படம் ஒன்றையும் மட்டும் எடுத்துக் கொண்டு "நீங்கள் இவ்வாறு ஒரே பிடிவாதமாக என்னைப் பலவந்தப்படுத்துகிற வரையில் நான் அப்படியே யுங்கள் கூட வருகிறேன். புறப்படுங்கள்" என்று தைரியத்தோடு கூறினேன்.

ஏனெனில் அதற்கு மேலும் அம்முரடர்களின் பிரி யத்திற்கு மறுத்துக்கூற எனக்குத் தைரியமில்லை. அவர்கள் எத்தகைய விபரீத காரியத்தையும் செய்யத் துணிவார்க ளென்று நானறிவேன். என் சொந்தத் தந்தையைப்பற்றி யும் தமையனைப்பற்றியும் இவ்வாறு கூறுவது எனக்கு எவ்வளவோ விசனமாகவும் அவமானமாகவுந் தானிருக்

கிறது. ஆயினும் அநீதியையும் அக்கிரமத்தையும் பொறுத்துக்கொண்டிருக்க என் மனம் இடந்தரவில்லை. ஓ தங்கம்மாள்! அச்சமயம் நீ தற்செயலாக என் அறை யருகில் வந்தாய். ஆனால் நான் என்ன செய்வது? என்ன எதிர்பார்க்கலாம். வீட்டிலுள்ளவர்களை யெழுப்பி விடவேண்டும். அப்படி எழுப்பிவிட்டால் என் பயங்கரமான இரகசியம் பகிரங்கத்திற்கு வந்து விடுவதோடு கௌரவமான என் புருடனுடைய மானம் போய் விடும்.

இது மட்டுமல்ல; அவர்கள் எத்தகைய அக்கிரமஸ்தர்களாகவிருப்பினும், என் தந்தையும் தமையனும் அவர்கள் தான் அறிவின்றி எனக்கும் என் கணவனுக்கும் தீங்கிழைக்கத் துணிந்தாலும், அவர்களுக்கு ஆபத்தையுண்டாக்க என் மனம் துணியவில்லை. அவர்களால் உடனே ஏதேனும் ஆபத்து நேர்வதாய் இருந்தாலொழிய நானே அவர்களைப் பிடித்துக்கொடுக்கக் காரணவாளியாயிருக்க என் மனம் சம்மதிக்குமா? அச்சாளரத்தின் வழியாகத் தப்பித்துச்கொண்டு போவது பெரும்பாலான பெண்களால் ஆகிற காரியமல்லதான். ஆனால் நானோ அடி நாளிலிருந்தே அத்தகைய கஷ்டமும் ஆபத்துமான வழிகளில் பழகியிருந்ததால் அது எனக்குக் கஷ்டமான காரியமாகப் புலப்படவில்லை. சுமார் நாற்பதடி உயரமுள்ள ஒரு ஏணியின் வழியாக விறங்குவது எனக்குச் சுலபமான ஒரு வேலையாகவே புலப்பட்டது.

ஆனால் அக்காரியம் நிம்மதியும், சமாதானமும், க்ஷேமமும், குற்றமற்ற சகவாசமும் பொருந்திய இடத்தை விட்டு மனக்கலக்கமும், திகிலும், பாபமும், துஷ்ட சகவாசமும் சதா நிறைந்துள்ள விடத்திற்குச் செல்வதாகவிருந்தது. அப்படிச் செல்வது மனதில் எவ்வளவோ பீதியையும், அதிருப்தியையும், மிக்க வெறுப்பையும், கலக்கத்

தையுமே யளித்தது. எனக்குப் பித்தம் பிடித்து விடும்போ லிருந்தது. இது என் காலில் பெரிய விலங்கு மாட்டியிருப் பது போல் இருக்கிறது. இதனாற்றான் நான் வீதியில் போலீஸ்காரனைக் கண்டதே நடுங்கி யோட வேண்டியதா யிற்று. நான் தப்பித்துக்கொண்டு போய் விடலாமென்று நம்பினேன். ஆனால் நான் என் முயற்சியில் ஜெயமடைய வில்லை. நான் அதிஷ்ட வசத்தால் என் தந்தையினிடமிருந் தும் என் தமையனிடமிருந்தும் தப்பித்துக்கொண்டுபோய் விட்டாலும் ஒரு பயனுமில்லாமற் போய்விட்டது. ஏனெ னில் நான் வீதியில் வீட்டின் தோட்டத்தின் பக்கம் இருக் கும் வாயிற்படியருகிற் சென்றேன். நான் யாருடைய அதிருப்திக்காக அதிகமாகப் பயந்திருந்தேனோ அவர் களே-என் கணவரே—அங்கு நின்று என்னை யுற்று நோக்கு வதைக் கண்டேன்.

அவரை யச்சமயத்தில் அங்குக் கண்டதே என் மனதி லுண்டான நடுக்கமும் வேதனையும் சகிக்கவொண்ணாத வையாகவிருந்தன. அதிலும் அச்சமயம் என் மனம் இருந்த பலகீனமான நிலைமையில் அவை தாங்க முடியாத வையே. அப்போது என் மனதில் ஒரே சிந்தனையிருந்தது. அதாவது நான் அந்த வீட்டிலிருந்தது அவருக்குத் தெரி யாது. இனியும் தெரியலாகாதென்பதே யென் கருத்து. இந்த எண்ணம் உதித்ததே நான் வேறொன்றும் சிந்திக் காமல் கண்மூடித்தனமாய் அங்கிருந்து திரும்பியோடி நான் விட்டுப் பிரிந்து வந்துவிட்ட என் தந்தையிடமும் தமையனிடமுமே சிக்கிக்கொண்டேன்" என்று கூறித் தன் கணவனை நோக்கி "தாங்கள் அச்சமயத்தில் ஏன் அங்கு நின்றுகொண்டிருந்தீர்களோ, என்னைக் கண்டபின் கதவைத் திறந்துகொண்டு ஏன் என்னைப் பின்பற்றி வர

வில்லேயோ, அது இப்போதும் எனக்கு விளங்கவில்லை'' என்றாள்.

பூபாலப்பிள்ளை:—நான் உன்னைக் கண்டதே பிரமித்து விட்டேன். என் மனதில் அச்சமயம் உண்டான கலக்கத்திற்கோரளவில்லை. ஏனெனில் அப்போது நீ என் வீட்டிற்குள்ளேயே யிருக்கிறாயென்றும், என் வீட்டிலிருந்து காணாமற்போன தையல் வேலை செய்து கொண்டிருந்த பெண் நீயே யென்றும் எனக் குத் தெரியாது. அந்த இரவில் எனக்கு நித்திரை பிடிக்காமல் என் மனம் பெரிய கலக்கத்திலிருந்தது. அதனால் நான் தோட்டத்தில் நல்ல காற்றில் சற்று உலாவலாம் என்று கருதிப் படுக்கையை விட்டு எழுந்து வெளியிற் சென்றேன். சுமார் பத்து நிமிடங் கள் கழிந்தபின் நான் தற்செயலாய் தோட்டத்தில் அப்பக்கவீதியின் புறமாகவிருக்கும் வாயிற்படியருகிற் சென்று வீதியைப் பார்த்தபடி நின்றேன்

அப்போது திடீலென்று உன் உருவத்தைக் கண்ட போது, இது நமது மனைவியின் உருவமே யென்று எனக் குப் புலப்பட்டது. உடனே யெனக்கு மிக்க பிரமையும் மனக் கலக்கமும், மனதில் பலவித உணர்ச்சிகளும் உண் டாயின. அவையாவும் சேர்ந்து இரண்டொரு நிமிடங்கள் என்னை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டன. நான் சற்று நிதான மடைந்து பார்த்தபோது உன் உருவம் அங்கில்லை. நான் கண்டது உன்னுடைய மெய்யான வுருவமா என்பதே எனக்கு மிக்க சந்தேகமாய் விட்டது. எனக்கு என்ன நினைப்பதென்று தோன்றவில்லை. அப்படியும் நான் உடனே வெளியில் வந்து நீ யாரென்று உண்மையை யறியவே கருதினேன். அந்தோ! அந்தக் கதவின் சாவி யென்னிட மில்லை. அக்கதவு மூடும்போது ஒரு வில்லால் தானே பூட்

சென்னை-600 005
186519

டிக்கொள்ளும். ஆனல் திறக்கவேண்டுமாயின் சாவியில்லாமல் திறக்க முடியாது. என்னிடம் அச்சமயம் அதன் சாவியில்லை. நான் எத்தகைய மனவேதனையோடு திரும்பியென் படுக்கை யறைக்குச் சென்றேனே அது கடவுளுக்கே தெரியும்—" என்றார்.

இராஜாமணி "அந்தக் கதவின் சாவி யென் தந்தையிடமிருந்தது. அவர் ஒருவாரம் அதற்காகக் கடுமுயற்சி செய்து கடைசியில் அவர்கள் அங்கு வந்து நுழைந்த தினம் மாலை தான் அச்சாவி யவர் கையிற் சிக்கியது. எனக்குப் பின்னல் தான் அச்சங்கதி தெரிந்தது" என்றாள்.

இம்மொழிகளைக்கேட்ட பூபாலப்பிள்ளை யச்சாவி எப்படித் தமது வீட்டிலிருந்து அக்கள்ளன் கைக்கு எட்டியிருக்கும் என்று தமக்குள் சிந்தித்தார். தமது மனைவிக்கு அச்சாவியைப்பற்றிய சங்கதியே தெரியாது. தங்கம்மாள் தன்னுயிர் போவதாயினும் எஜமானைத் துரோகம்செய்து துன்பத்திற்காளாக்குபவளல்ல. ஆகவே, நம்மிடமுள்ள வேலைக்காரரில் யாரோதான் பணத்திற்காசைப்பட்டு அச்சாவியைக் கள்ளரிடமளித்திருக்க வேண்டுமென்று தமக்குள் தீர்மானித்துக் கொண்டு, "சரி என்னிடமுள்ள வேலைக்காரரில் ஒருவருடைய செய்கை" என்று மெதுவாய்த் தமக்குள்ளாகவே கூறிக்கொண்டு "பிறகு நடந்த சங்கதியையும் கூறு" என்றார்.

**இராஜாமணி:**—"அன்று என்னைக் கொண்டுபோய் ஒரு வீட்டின்மேல் அறையில் வைத்து விட்டார்கள். ஏன், அடைத்து விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். அந்த இடம் எங்கிருக்கிறது என்று எனக்கு இன்னும் தெரியாது. எந்தவிடம்? இதோ இந்தவிடமே. ஏனெனில் அவர்கள் என்னை என் கணவன் வீட்டிலிருந்து அழைத்துச் சென்றதே அடுத்த வீதியில் ஒரு வண்டி

வாடகைக்கு பேசப்பட்டு அதில் நான் ஏற்றப்பட்டேன் வண்டிக்குள் என்னுடன் என் தமையன் மட்டும் உட்கார்ந்து கொண்டான். என் தகப்பனர் வண்டிக்காரனோடு வண்டியின் முன்பக்கம் மேலேயுள்ள ஆசனத்தி லுட்கார்ந்துகொண்டார். வண்டியின் சாளரங்கள் மூடப்பட்டன. ஆதலின் வண்டி எந்த வழியாய்ச் செல்கிறதென்று எனக்குத் தெரியாது. இன்னும் தெரியாது.

வண்டி சுமார் இரண்டுமணி நேரம் வேகமாகச் சென்றது. இவர்கள் நம்மை நகரத்தைவிட்டு நாட்டுப் புறத்தில் எங்கோ கொண்டு போகிறார்க ளென்று எண்ணிக் கொண்டேன். ஏனெனில் அந்த நேரத்தில் வண்டி குறைந்தது பத்து மைல் தூரம் சென்றிருக்கலாம். பிறகு இந்த வீட்டிலுள்ள அறையில் என்னைக் கொண்டுவந்து விட்டார்கள். அதுமுதல் எனக்குச் சிறைவாசமே. நான் எந்தக் காரணத்திற்காகவும் அறையை விட்டு வெளியில் செல்லலாகாது. என் தந்தையாவது தமையனாவது இருவரில் ஒருவர் எந்நேரமும் என்னிடமே காவலிருப்பார்கள். அவர்கள் இருவரும் ஏககாலத்தில் ஒருபோதும் என்னைத் தனியாய் விட்டுவிட்டு வெளியில் செல்வதே யில்லை. இவ் வீட்டுக்காரியஸ்தியோ, வீட்டுக்காரியோ அவள் ஒருத்தியையே நான் காண்பது. அவளே எங்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலியயாவும் கொண்டு வருபவள் அப்போதும் என் தந்தை தமையன் இருவரில் ஒருவர் கூடவே யிருப்பதால் நான் அவளிடம் கூட ஒன்றும் பேச முடியாது. இத்தகைய கௌரவமான சிறையில் நான் இருக்கவேண்டியிருந்தது.

ஏனெனில் இங்குவந்த மறுநாளே என்தந்தையும் தமையனும் என்னை நோக்கி "நீ வேண்டுமாயின் இப்போதே

யுன் கணவனிடம் செல்லலாம். ஆனால் அங்குச் சென்ற பின் அவன் எங்கள் பிரியப்படி எங்களுக்கு உதவி செய்யும்படி யவனுக்கு நீ பயமுறுத்தவேண்டும். அவன் எங்கள் பிரியப்படி நடக்காவிட்டால், அவன் மானம் போய்விடும்படிச் செய்துவிடப் பின்னிடைய மாட்டோமென்று அவனுக்குத் தெரிவித்துவிடு. இப்போது நாங்கள் ஒன்றும் அதிகமாகக் கேட்கவில்லை. நாங்கள் இந்த நாட்டைவிட்டு வெளி நாட்டிற்குச் செல்லவேண்டும். அதற்கு ஒரு சௌகரியமான பணத்தொகையும் வெளி நாட்டிற்குச் செல்லப் போதுமான செலவும் கொடுத்து எங்களுக்கு அவசியமான உதவி செய்துவிட்டால் போதும்" என்று கூறினார்கள்.

நான் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்ள அடியோடு மறுத்து விட்டதால்தான் இத்தகைய கடுமையான சிறைவாசம் செய்யவேண்டி நேர்ந்தது. நான் சில வாரங்கள் இத்தகைய சிறைவாசம் செய்ய நேர்ந்தது இப்போது எனக்கு மனதிற்குச் சந்தோஷமாகவே யிருக்கிறது. ஏனெனில் இதனால் என் கணவருக்கு என் அன்பிலும் கற்பிலும் நம்பிக்கையும் மதிப்பும் உண்டாயிற்று. மேலும் நான் எங்குச் சென்றாலும் தங்கள் நினைப்பு அன்போடில்லாவிடினும் இரக்கத்தோடேனும் என்னைத் தொடர்ந்து வரும் என்று நம்பிக்கை யிருக்கிறது" என்று தன் கதையைக் கூறிவிட்டு, தன் கணவனது வேண்டுகோளுக்கு மட்டும் இணங்கப் பிரியப் படாதவளாகவே எப்போதும் போல் எட்ட நின்றாள்.

## 23—வது அத்தியாயம்.

பூபாலப்பிள்ளையோ தன் மனைவியின் மறுதலிப்பால் மனத்தளர்ச்சி யடையவில்லை. அவர் தமது மனைவியை நோக்கி "நீ என் பொருட்டாகவும் உன் பொருட்டாகவும் இவ்வளவு கஷ்டங்களையனுபவித்தபின் நான் கடைசியாகக் கோரும் விஷயத்திற்கு இணங்க மறுப்பது சற்றேனும் நீதியாகுமோ?" என்றார்.

இராஜாமணி "என் அன்பு இவ்விஷயத்தைவிட ஆழ்ந்தது. தங்களுக்கு நேரும் நீண்டகால மனவருத்தத்தையும் அவமானத்தையும் தடுப்பதற்காகவே நான் இம்மாதிரி செய்கிறேன். அதனால் தங்களுக்குக் கொஞ்சகால வியாகுலத்தை யளிக்கவும் துணிந்தேன்" என்றாள்.

பூபாலப்பிள்ளை மிக்க துணிகரத்தோடு பேசத் தொடங்கி "இராஜாமணி! உனக்கு ஒரு ஆடவனுடைய உள்ளம் எத்தகையது என்பது தெரியாது. நான் இப்போதுன்னை யிழப்பதாயின் அதனால் எனக்குச் சொல்பகால வியாகுலம என்று நீ கருதுவது முழுமையும் தவறு. இது என் மரண பரியந்தம் தீராத்துயராய் முடியும் என்பது சத்தியம். உன் விஷயத்தில் இப்போதென் மனதில் முழுமாறுதலுண்டாயிருப்பதை நீ யறியவில்லை" என்றார்.

இராஜாமணி:—"அப்படியாயின் தாங்கள்..." என்றாள் அதற்குமேல் என்ன காரணத்தாலோ பேச முடியாமல் நின்று விட்டாள். பெரும்பாலும் அவள் நாணத்தால் அப்படிச் செய்தாளென்று தெரிந்தது.

அச்சமயம் தங்கம்மா இதுதான் நான் பேசவேண்டிய சந்தர்ப்பம் என்று உணர்ந்து, இராஜாமணியின் அருகிற் சென்று,

"என் அன்பார்ந்த எஜமாட்டியே! நீங்கள் இச்சமயத்

தில் இந்த விஷயத்தில் மறுத்துக் கூறுவது தகுதியாயில்லை. நான் நெடு நாட்களாக இக்குடும்பத்தில் இருந்து வருகிறேன். இதன் க்ஷேமத்தில் நான் கருத்துடையவள். இதன் கௌரவம் எத்தகையதென எனக்கு நன்றாய்த் தெரியும்" என்றாள். அப்போது அவள் மனதில் ஏதோ மர்மமான துடி துடிப்பு இருந்ததாகத் தெரிந்தது பின்னும் அவள் தன் எஜமானியை நோக்கி "அம்மா! இச்சமயத்தில் நீங்கள் உங்கள் கணவர் விரும்புகிறமாதிரி நடக்க மறுப்பது இக்குடும்பத்திற்குப் பெருந்தீங்கு விளைவிப்பதாகும், இதைவிட அதிக தீங்குநீங்கள்செய்ய வேண்டியதில்லை. கடவுளேயுங்களை யமர்த்திய நிலைமையிலிருந்து நீங்கள் விலகிக்கொள்வது இக்குடும்பத்திற்குப் பெருந்தீங்கு செய்வதாகும்" என்றாள்

அச்சமயம் மார்த்தாண்டம் சீமாட்டி பேசத் தொடங்கி, இதுகாறும் பேசாமல் யாவும் கேட்டுக்கொண்டிருந்தவள், முன்னுக்கு வந்து இராஜாமணியை நோக்கி,

"அம்மா இந்த உத்தமியும் உங்கள் விஷயத்தில் மிக்க அன்பும் அபிமானமு முடையவளுமான தங்கம்மாள் கூறியதை நான் மறுபடி கூறுகிறேன். நான் உன் கணவர் குடும்பத்தைச் சேர்ந்தவள். அக் குடும்பத்தைப்பற்றி எப்போதும் பெருமை யுடையவள். நான் உன்னை வேண்டிக் கொள்வதாவது, நீ என் சுற்றத்தாராகிய பூபாலப் பிள்ளையை மணம் புரிந்து கொண்டவரையில் அவர் குடும்பத்தை யாதரித்து அவருக்குச் சந்தோஷத்தை யுண்டாக்க வேண்டியது உன் கடமை. அதோடு நீயும் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கவேண்டும். சட்டத்தின்படிக்கும் கடவுளின் பிரியப்படிக்கும் அம்மாதிரி நடந்துகொள்ள வேண்டியது உன் கடமையாயிருக்கிறது. நீ யதற்கு மாறாக நடப்பது அக்குடும்பத்திற்குத்

தீங்கிழைப்பதேயாகும் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் அவர் உன்மேல் வைத்திருக்கும் அன்பினாலேயே நீ யம் மாதிரி நடந்து கொள்ள வேண்டும். இதே நான் உனக்குச் சகோதரிபோல் கூறுவது'' என்றாள்.

தான் முன் பின் பாராத கெம்பீரமான அச் சீமாட்டி தன்னிடம் அம்மாதிரி கூறியதைக்கேட்டதே யவளை யுற்று நோக்கினாள். அவளுடைய இரக்கமும் கருணையும் பொருந்திய வதனத்தையும், நாணயமான உடையையும் கண்டு தன் காத்தை நீட்டி அவள் கரங்களைப் பற்றிக் கொண்டு, பாதி விசனமும், பாதி மதிப்போடும் கூடிய பார்வையோடு அவளை யுற்று நோக்கி,

"அம்மா! தாங்கள் கூறிய நன்மை பொருந்திய மொழிகளுக்காக நான் மிக்க வந்தனமளிக்கிறேன்," என்றதே,

அச்சீமாட்டி "அப்படியாயின் எங்களுடைய வேண்டுகோளை யேற்றுக்கொள்வாயென்று நம்புகிறேன்" என்றாள்.

இராஜாமணி தன் தந்தையும் தமையனும் உட்கார்ந்திருந்த இடத்தைக் குனிந்தபடி நோக்கி, தலையசைத்து "அய்யோ! அப்படிச்செய்ய நான் துணியலாகாது." என்றாள்.

பேசாமல் யாவும் கேட்டுக்கொண் டிருந்த தங்கம்மாள் முன்பு பேசியதுமுதல், அவள் மனம் பதைத்துக் கொண்டே யிருந்தது. அவள் மனதில் ஏதோ பெரியமர்மமான இரகசிய மிருப்பதாகப் புலப்பட்டது. இப்போது அச்சீமாட்டி கூறியதற்கு இராஜாமணி கூறிய விடையைக் கேட்டதே அவள் மனத்துடிப்பை யின்னும் அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. அதன்மேல் அவள் தன் உள் சட்டையின் சேபியில் கையைவிட்டு அதிலிருந்து ஏதோ

ஒரு மடித்த கடிதத்தைக் கரத்தி லெடுத்துக்கொண்டு, "இராஜாமணியம்மாள்! என் எஜமானியே! இப்போது நீ செய்திருக்கும் தீர்மானத்தால் உன்மேல் பூரண அன்புடைய கணவருக்கு நீ மனவருத்தத்தை யுண்டாக்குவதோடு அவருக்கு ஆயுள்பரியந்தம் பெருந்துயரை யுண்டாக்குகிறாய். நான்கூறும் இம்மொழி சத்தியமானவாக்கு. நீ உன் தீர்மானத்தில் ஒரே பிடிவாதமாக விருந்தால் அதனால் அவருக்கு - உன் அன்பார்ந்த கணவருக்கு - எவ்வளவோ துன்பத்தை யுண்டாக்குகிறாய். இத்தகைய சந்தர்ப்பத்தில் நீயுன் தீர்மானத்தைப் பற்றிப் புனராலோசனை செய்யவேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன். ஏனெனில் நீயுன் பிடிவாதத்தால் உன் கணவனுக்குப் பெருந்தீங்கை விளைவித்துவிடுகிறாய். அது எத்தகைய தீங்கென்று உனக்காவது அவருக்காவது இன்னும் தெரியாது" என்றாள்.

இராஜாமணி:—"நான், நீ கூறும் விஷயம் உண்மையென்றறிந்தால்....ஆ அப்போதும்........என்றாள்.

தங்கம்மாள் இராஜாமணியைநோக்கி "அம்மா! ஒரு சமயம் இக்கடிதத்தைப் பார்த்தால் நீயெப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது இனியேனும் உன் மனதிற்படுமென்று நம்புகிறேன்" என்று கூறிவிட்டுப் பூபாலப்பிள்ளையை நோக்கி,

"அய்யா! இப்போது நான் செய்யும் காரியத்தைப் பற்றி என்னை மன்னிக்கும்படியாக முன்னடியே யுங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் நெடுநாட்களாக உங்கள் குடும்பத்தி லிருந்தவளென்பதும், உங்கள் குடும்பத்தின் கௌரவமும் யாவும் எனக்குத் தெரிந்து நான் இவ்விஷயத்தில் எவ்வளவோ மனவருத்த மடைந்திருக்கிறேன் என்பதும் தங்களுக்குத் தெரிந்தவிஷயமே. என்

மேல் ஒருகடமை விழுந்திருக்கிறது. அக்கடமையை நான் நிராகரிக்க முடியாது. பழைய வேலைக்காரியாகிய நான் அவ்வாறு செய்யவேண்டி யிருப்பது எனக்குக் கஷ்டமா கவே யிருக்கிறது. ஆயினும் நான் செய்தே தீரவேண்டும். இதோ இக்கடிதம்" — என்றதும் "ஆயினும் அய்யா! இது தாங்கள் முன்னுடி வாசித்துப் பார்க்கவேண்டியதே" என்று கூறிக்கொண்டே உளமும் கரமும் ஏககாலத்தில் பீதியால் நடுங்கிக்கொண்டே அக்கடிதத்தை யவர்கரத்தில் கொடுத்தாள்.

பூபாலப்பிள்ளை யதை வாங்கிப் பார்த்ததே "ஓ! என் தந்தையின் கையெழுத்து" என்றுர். இம்மொழிகளைக் கேட்டதே யாவரும் திடுக்கிட்டு மனக்கிளர்ச்சி யடைந் தார்கள். அவர் அவ்வாறு கூறியபோது தங்கம்மாள் "ஆம். என் கண்முன்பாக வரையப்பட்டது" என்றுள். பூபாலப்பிள்ளை யதைப்பார்த்தபின் கடைசியில் கையொப் பத்தை யுற்றுநோக்கி, தங்கம்மாளைப் பார்த்து "இது காறும் இது ஏன் எனக்குக் காட்டப்படவில்லை?" என்றுர்.

தங்கம்மாள்:—உமது தந்தை யவ்வாறு கட்டளையிட்டார். அவர் என்னை நோக்கி "இது என்னுடைய கடைசி மரணசாசனம். நான் இதை யிரகசியமாக உன்னிட மளிக்கிறேன். ஒருவருடகாலம் இதைப்பற்றி உலகத் தில் ஒருவருமே யறியலாகாது. இப்போது நான் கூறுவதைக் கவனமாகக்கேள். இந்த ஒரு வருடத் தின் முடிவில் என் மருமகள் இவ்வீட்டின் எஜமானி யாக விருந்து காரியங்களை நடத்திஞல், அவள் தன் கணவனுேடு சந்தோஷமாகவும் சுகமாகவும் வாழ்ந்து கொண்டிருந்தால், இக்கடிதத்தை வெளியில் ஒரு வர்க்கும் காட்டவேண்டாம். தீயிற்கொளுத்திவிடு. அப்படிக்கின்றி, அவள் இறந்து போகாமல்

வேறெந்த காரணத்தாலாவது இந்த வீட்டில் இல்லா விடின் இக்கடிதத்தை யென் புத்திரனிட மளித்து அவன் உண்மையில் என் புத்திரனுயின் இதில் கூறி யுள்ளபடி நடந்து கொள்ள வேண்டு மென்று நான் கட்டளை யிட்டதாகக்கூறு" என்று எனக்குக் கட் டளை யிட்டார்.

இம்மொழிகளைக் கேட்டதும் பூபாலப்பிள்ளையின் கரத்திலிருந்த கடிதம் துடித்தது. அவர் தங்கம்மாளை நோக்கி "இதிலடங்கியுள்ள சங்கதி யென்ன வென்று உனக்குத் தெரியுமல்லவா?" என்ருர். தங்கம்மாள், அவர் எழுது'போது அவர்கரத்தை நடுக்காதபடி பிடித்துக் கொண்டிருந்தேன்" என்று மனவருத்தத்தோடு கூறினுள்.

அதன்மேல் பூபாலப்பிள்ளை தம்மனைவியை நோக்கி "இராஜாமணி! நான் உன்மேல் கொண்ட மனப்பூர்வமான பூரணக்காதலோடு என்னை மணம்புரியும்படி யுன்னை வேண் டிக்கொண்டபோது, நீ என்னுேடுகூட என் அந்தஸ்தை யும் செல்வத்தையும் அனுபவிக்க வேண்டுமென்றும், என் இருதயத்தின் பூரண அன்பையும் நீயடையவேண்டு மென் றுமே நான் கருதினேன். இக்கடிதம் என்கண்களைத் திறந்து விட்டது. இக்கடிதத்தில் என் தந்தை குறித்துள்ள நிபந்தனையின்படி அவருடைய ஆஸ்தி முழுமையும் அனு பவிக்க வேண்டிய ஆள் அவருடைய மருமகளே யன்றிப் புத்திரனல்ல. அவர் விருப்பத்திற்கு மாருக நான் ஒரு போதும் நடக்கமுடியாது" என்ருர்.

சுருக்கமாக அம்மரண சாசனத்தின் நிபந்தனை யின்ன தென்றுணர்ந்த இராஜாமணி "ஹா! எதோ அதைக் காட்டுங்கள்" என்று அப்பத்திரத்தை யாத்திரத்தோடு அவர் கரத்தினின்றும் பிடுங்கிக்கொண்டு அதை யுற்று நோக்கி, "அடடா! அவர் எப்படி—எப்படித்தான் இவ்

வாறு எழுதினர்?" என்று கூறிக்கொண்டே அதை முழுமையும் வாசித்துப் பார்த்து, கசக்கித் தன் மார்பி லணைத்துக்கொண்டாள். "அந்தோ! அவர் எனக்குச் செய்யும் தீங்கு இதற்கு அதிகமானது வேறொன்றுமில்லை. இதை யவர் கருதாமற் போனது எப்படியோ என்புத்தியிற் படவில்லை" என்று இரண்டொரு நிமிடங்கள் திகைப் படைந்தவள் போல் சிந்தனையிலிருந்தாள்.

பிறகு தனக்குள் சமாளித்துக்கொண்டு தன் மனதில் கொதித்தெழுந்த உணர்ச்சியை யடக்கமுடியாதவளாய், மிக்க சந்தோஷமும் தைரியமும் துணிகரமும் உடைய வளாய்,

"அடடா! கடைசியில் இது இப்படியாகவா முடிந்தது? நான் பணத்தின்மேல் நாட்ட முடையவளென்று கருதப் பட்டது. தாங்களும் நானும் ஒரே குடும்பத்தில் ஒன்று சேர்ந்து வாழவிடாமல் தடுக்கும் இந்த இக்கட்டைப் பண ஆசையா ஒழிக்கும். என் உள்ளம், அந்தோ! அப்படிப் பட்டதல்லவே. அதை யவர் அறிந்தாரோ இல்லையோ என்பது எனக்கு இப்போது சந்தேகத்திற் கிடமாய்விட் டது என்னை யன்போடு மெய்யான மருமகளாய்த் தாங்கிக் கொண்ட அந்த மார்பில் இத்தகைய எண்ணம் எப்படி வந்ததோ எனக்குப் புலப்படவில்லை. தெய்வ ஆசீர்வாதத் தால் அன்பினால் இரண்டும் ஒன்றாகக் கட்டுப்பட வேண்டிய உள்ளங்களை அநித்தியமாகிய செல்வம் கிடைப்பதும், கிடைக்காமல் போவதுமா கட்டுப்படுத்தும்? தங்கள் தந்தை அச்சமயம் என்னை யன்புடன் மார்போடணைத்துக் கொண்ட பட்சத்தை நினைக்கும்போது அன்பே நம்மிரு வரையும் பிணைக்குமன்றி எத்தகைய செல்வமும் அக் காரியத்தைச் செய்யாது. அவர் அச்சமயம் காட்டிய நம்பிக்கையும் அன்புமே நம்மைப் பிரியாதபடி செய்யும்

பந்தமாகும். வேறு எதுவுமே அக்காரியத்தைச் செய்ய முடியாது. நாம் இருவரும் இப்போது இரண்டு வித்தியாச மான, உயர்வு தாழ்வான மேடைகளி லிருக்கிறோம். நம் மிருவரையும் சமரசமான ஒரே மேடையில் அன்போடும் சுகத்தோடும் சந்தோஷத்தோடும் வைக்கத்தக்கது அன்பு ஒன்றேயாகும். அன்பொன்றே நம்பிக்கையையும் க்ஷேமத் தையு மளிக்கும். அதனாற்றான் நாம் வாழ் நாள் முழுமை யும் சுகத்தோடும் சந்தோஷத்தோடு மிருக்கலாம்'' என்று கூறிவிட்டு,

ஒரு கன்னிகை தன் முதற்காதலால் எவ்வளவு ஆனந்தத்தை யடையக்கூடுமோ அத்தகைய ஆனந்தத் தோடும் மனதில் சொல்லொணாத சந்தோஷக் கிளர்ச்சி யோடும் உற்சாகத்தோடும், "இந்தச் செல்வத்தைப்பற்றிய நிபந்தனையே நமக்குள் எப்போதும் வேண்டாம்'' என்று கூறிக்கொண்டே அம்மரண சாசனத்தைக் கிழித்துத் தீயி லெறிந்துவிட்டு அத்தியந்த ஆவலோடும் பிரேமை யோடும் தன்கணவனது மார்பின்மேல் சாய்ந்து விட்டாள்.

பூபாலப்பிள்ளை இன்ன விதமென்று விவரிக்கொண் ணாத ஆனந்தத்தோடு தமது அன்பார்ந்த மனைவியைத் தம் மார்பின்மேல் ஏற்றுப் பரவசமடைந்தார். அவருக்கு அவள் மேல் இது காறுசமிருந்த அன்பு இப்போது அவ ளுடைய மிக்க பெருந் தன்மையான செய்கையைக் கண்டதே அளவு கடந்ததாகிவிட்டது. ஏனெனில் தமது தந்தையின் சொத்தனைத்தும் அவருடைய பிதுரார்ச்சிதம். அதை யவர் தம் பிரியப்படி யாருக்கு வேண்டுமாயினும் வைத்து விடலாம். இப்போது அவர் மரண சாசனத்தின் படி அவருடைய சொத்தனைத்தும் இராஜாமணியுடையதே. அவள் அது முழுமையும் எடுத்து அனுபவித்துக் கொண்டு

பூபாலப்பிள்ளையை நடுத் தெருவில் அனாதைபோல் விட்டு விடலாம்.

அப்படிக்கின்றேல் யாவும் தன் சுயாதீனப்படுத்திக் கொண்டு பூபாலப்பிள்ளையைத் தன் பிரியம்போல் நடக்கும் படிச் செய்யலாம். இறந்தவர் கருத்து எப்படி யிருந் தாலும் இப்போது சொத்தனைத்தும் அவள் கையில் சிக்கி விட்டதால் அவள் எப்படி வேண்டினும் செய்யலாம். ஆனால் அந்த மாதோ செல்வதைச் சற்றும் மதிக்கவில்லை. "அடடா நாம் நமது கணவரோடு கூடி வாழ்ந்தால், நமது தந்தை தமையன் இவர்களுடைய அயோக்கிய நடக்கை யால் அப்படிப் பட்டவர்களின் சுற்றத்தாளை மணம் புரிந்து கொண்டாரேயென்று அவருக்கு அவமான முண்டாகுமே. அவர் மிக்க கௌரவம் பொருந்திய குடும்பத்தைச் சேர்ந்த வரும், மிக்க கௌரவமும், பெருந் தன்மையும் யோக்கிய தையும் உடையவரு மாயிற்றே, நம்மால் அவருக்கு அவ மானம் நேரிடலாகாது என்று கருதினேம். இப்போது அவர் தந்தையின் செய்கையால், நாம் அவரிடம் கூடி வாழா விட்டால் அவர் நிராதரவாய் விடப்படுவார் போ லிருக்கிறது. இனியும் நாம் மற்ற விஷயங்களைச கவனிப் பதில் பயனில்லை. நம்மால் அவருக்குமரணபரியந்தம் இடுக் கண் உண்டாக லாகாது. இனி எப்படியாயினும் சரி நாம் நமது கணவரின் சுகவாழ்க்கையையே கருத வேண்டும். இப்போது நாம் அவரோடிரா விட்டால் செல்வத்தை நாம் எடுத்துச் செலலவேண்டும். அவரோ தந்தையின் கட்டளை யை மீறி நடப்பவரல்ல வென்று தெரிந்து கொண்டோம். ஆகையால் கடவுள் சித்தப்படி நடக்கட்டும்" என்று தனக் குள் தீர்மானித்துக் கொண்டே தன் கணவன் அபீஷ்டப் படி நடப்பதென்று உடன் பட்டாள்.

பூபாலப் பிள்ளையும் இவ்வளவு விஷயங்களையும் ஏக

காலத்தில் தமக்குள் உணர்ந்தாராதலின் தமது மனைவியின் பெருந்தன்மையைப் பூரணமாக வுணர்ந்து ஆனந்த பரவச மடைந்து விட்டார்.

---

## 24—வது அத்தியாயம்.

பங்கஜம் என்ற மார்த்தாண்டம் சீமாட்டி ஆதியில் பூபாலப்பிள்ளையின்மேல் காதல்கொண்டிருந்தாள். பிறகு பூபாலப்பிள்ளையாலேயே அவள் அன்னியநாட்டுப் பிரபுவை மணம் செய்ய நேர்ந்தது. அப்பிரபுவை யவள் உண்மையில் காதலித்து மணம்புரியவில்லை. அவருடைய அந்தஸ்திற்கும் செல்வத்திற்கும் ஆசைப்பட்டே யவரை மணம்புரிந்து கொண்டாள். ஆனல் அவர் சீக்கிரத்தி லேயே காலமாய்விட அவள் சுயாதீனமடைந்தாள். கண வன் இறந்து போனதால் அவளுக்கு விசனமில்லையென்று நாம் கூறவேண்டுவதில்லை. விசனத்திற்கு மாருய்ச் சந்தோ ஷமே யடைந்தாள் என்று கூறலாம்.

ஏனெனில் அவர்கள் தேசாசாரப்படி மற்ருெரு புருடனை மணம்புரிந்துகொள்ளலாம். இப்போது கணவன் இறந்து போனதால் தன்னை யெள்ளளவேனும் கட்டுப்படுத்தக் கூடியவர்கள் ஒருவருமேயில்லை. திரண்ட செல்வமிருக் கிறது. திரண்ட செல்வத்தைக்கொண்டு தான் என்ன வேண்டுமாயினும் செய்யலாம், எங்கு வேண்டுமாயினும் போகலாம். அவள் இந்திரபுரிக்குத் திரும்பி வந்தபோது தன் சுற்றத்தாராகிய பூபாலப்பிள்ளையை மணம்புரிந்து கொள்ளலாமென்று கருதியே யிருந்தாள். அவர் மணம் புரிந்துகொள்ளவில்லையென்றே அவள் கருதியிருந்தாள். அதனல் அன்று விருந்து நடந்த விடத்தில் இருவரும் சந் தித்துப் பேசியபோது, அவர் "நான் உன்னைக் கடைசியாய்

ஒரே முறை பார்த்துவிட்டுப் போகவந்தேன்" என்று கூறியது அவளுக்கு மிக்க வியப்பை யளித்தது. ஆனல் அவள் தங்கம்மாள் மூலமாக நடந்த சங்கதிகளை யெல்லாம், அவர் மணம்புரிந்து கொண்டது, மனைவி அவரை விட்டுப் பிரிந்திருப்பது, அவள்காணமற் போனது யாவும் அறிந்துகொண்டாள். அவள் பூபாலப்பிள்ளை மேல் வைத்திருந்த காதல் பரிசுத்தமானதாகையால் இவை யாவுமறிந்ததே, அவள் அவர் விஷயத்தில் மிக்க இரக்கங் கொண்டாள். உண்மையில் அவருக்குத் தன்மேல் காத லிருக்கிறதென்றும், அவருடைய தந்தையின் பலவந்தத் தாலேயே மணம்புரிந்துகொள்ள நேர்ந்ததென்றும், அதற்காக அவர் உள்ளத்தில் மனவருத்தமே யடைகிறார் என்றும் அவள் மனதிற் பட்டுவிட்டது.

அவள் குணத்தின் பெருந்தன்மையை யுணர்ந்திருந்த தங்கம்மாள் வேணுமென்றே அச்சமயம் பூபாலப்பிள்ளை யின் கடிதத்தைக் கண்டு அங்கு வந்தபோது அவளையும் கூட அழைத்து வந்தாள். இப்போது பூபாலப்பிள்ளையும் அவர் மனைவியும் மனக்கலக்கமின்றி ஒரு மனதாய் வாழ உடன்பட்டது பங்கஜத்திற்கு மிக்க சந்தோஷத்தையே யுண்டாக்கிற்று. அவர்கள் மணம் செய்துகொண்டது மிக்க இரகசியமாகவே. ஆகலின் பூபாலப்பிள்ளையின் நண் பர்களுக்குக்கூட அச்சங்கதி தெரியாது. பங்கஜம் மேற் கண்ட சமாசாரங்கள் நடந்த மூன்றுவது நாள் அவர்கள் திருமணத்தைக் கொண்டாடுவதற்காகத் தன் மாளிகையில் மிகச் சிறப்பான ஒரு விருந்து நடத்தினள். அந்த விருந் திற்கு அவளுடைய சிநேகிதர்களும் பூபாலப்பிள்ளையின் சிநேகிதர்களும் வேறு அநேகம் பிரமுகர்களும் கன வான்களும் அழைக்கப்பட்டார்கள். வந்தவர்களெல்லாம் இராஜாமணியின் குணம் பூபாலப்பிள்ளையின் அந்தஸ்துக்

கும் பெருந்தன்மைக்கும் பூரணமாய்ச் சகல விஷயங்களி லும் பொருத்தமானதேயென்று புகழ்ந்து கொண்டார் கள். ஆனால் அவள் யாருடைய குடும்பத்தைச் சேர்ந்த வள் என்பது ஒருவர்க்கும் தெரியாது.

* * * * * *

* * * * *

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த—அதாவது இராஜா மணியின் தந்தையும் தமையனும் சிறையாக்கப்பட்ட மறு நாள் ஒரு விடத்தில் நடந்த சம்பவங்களைப்பற்றி யிங்குக் கூறவேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசிய மாயிருக்கிறது. அன்று மாலை சுமார் நான்கு மணி யிருக் கும். அப்போது நாம் முன்பு கூறிய கள்ளர் இரகசிய மாய் வசித்துக் கொண்டிருந்த தனிவீட்டிற்குக் கிழக்கில் சுமார் ஒரு மைல் தூரத்திலிருக்கும் ஒரு குக்கிராமத்தில் நாம் இப்போது கூறும் சம்பவம் நிகழ்கிறது.

அக்கிராமத்தின் ஓரத்தில் ஒரு சிறு தோட்டத்தின் மத்தியில் ஒரு தனி வீடிருக்கிறது. அது சிறிய வீடே. அவ்வீட்டின் முள்ளுள்ள தாழ்வாரத்தில் நாம் கூறியபடி மாலை நான்குமணிக்கு இருவர் உட்கார்ந்து மிக்க அக்கரை யாய்ப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் ஆடவர்களே. ஒருவனுக்குச் சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கும். அவன் முகத்தைக் காணும்போதே எவ ரும் அவன் முரட்டுத்தனமான குணமுடையவனென்று அறியலாம். அவன் நுதலிலுள்ள கோடுகளாலும் கண் பார்வையாலும் மற்ற சாமுத்திரிகா லட்சணங்களாலும், அவன் இரக்கமற்ற கல் நெஞ்சனென்றும், எதற்கும் அஞ்சாத மிருகத்தனமான தைரியமும், பாபத்திற்கஞ்சாத மனமுமுடையவனென்பது நன்கு புலப்பட்டது.

அவன் எதிரில் இருப்பவன் அவனுடைய புத்திரன்;

அவனுக்கு வயது இருபத்து மூன்றிருக்கும். எல்லா விஷயங்களிலும் தந்தையைப்போன்ற குணங்களையே யுடையவன். அவன், தந்தையைக் காட்டிலும் நயவஞ்சகமும், கபடமும், தந்திரமும், மாறுவேடமணிந்து எவரையும் ஏமாற்றும் சாமார்த்தியமும், எத்தகைய பஞ்சபாதகங்களுக்கும் அஞ்சாத குணமும் உடையவன். தந்தையின் பெயர் வீரப்பன். மகன் பெயர் ஏழுமலை.

**தந்தை:**—குழந்தாய்! சங்கதி தெரியுமா? கேசவனும் அவன் மகனும் கூண்டில் சிக்கிக் கொண்டார்களாமே?

மகன் இதைக் கேட்டு மிக்க வியப்படைந்து "என்ன? நான் நம்பவில்லை. உண்மையா? கேசவன் சற்று அஜாக்கிரதையாயிருந்தாலும் சுப்பன் மிக்க ஜாக்கிரதையாய்த் தூண்டிற்காரன்போ லிருப்பானே. அவர்கள் எப்படிச் சிக்கிக்கொண்டார்கள்? அத்தனிவீடு.......என்றதே,

**தந்தை:**—கேசவன் மகள் இருக்கிறளே - அப்பெண் எங்கோ போய் விட்டாளென்றூர்களல்லவா, அதிலும் ஏதோ நல்ல வேட்டை கிடைக்கும் சமயத்தில் அதைக் கெடுத்துவிட்டு அந்த ஆளை வெளியனுப்பி விட்டாள் என்று கூறினர்களே அச்சங்கதி நினைவிருக்கிறதல்லவா. அம்மனிதன் ஒரு செல்வவந்தனும். இப்போது இவர்கள் ஏதோ அச்சம்பந்தத்தால் தான் சிக்கக்கொண்டார்கள் என்று நமது ஆசாமி....குள்ளன்—கூறினன். யாரோ துப்பறியும் ஆசாமி மூலமாக அவர்கள் பிடிக்கப்பட்டு இப்போது நகர சிறைச்சாலையிலிருக்கிறூர்கள்.

**மகன்:**—விவரம் ஒன்றும் தெரியவில்லையோ?

**தந்தை:**—மற்ற விவரம் ஒன்றும் தெரியவில்லை. நாமே முயற்சிசெய்து யாவும்கண்டுபிடிக்கவேண்டும். நீ நான்

கூறுகிறபடி செய். சிறைச்சாலை வீதியிலுள்ள தஞ்சாவூர் ஹோட்டலுக்குச் சென்று நான் கொடுக்கும் கடிதத்தை ஹோட்டல் காரனிடம் கொடு. அவன் எனது அந்தரங்க நண்பன். அச்சிறைச் சாலையில் கொண்டு வரப்படும் கைதிகளுக்கு அவன் சாப்பாடு அனுப்புவது வழக்கம். அதனால் சிறைச்சாலைக் காவலர்களில் ஒருவன் அவனுக்கு மிக்க நேசம். அவன் இவர்களைப்பற்றிய சங்கதிகளை யெப்படியாவது கண்டு பிடித்து நமக்குக்கூறுவான். பிறகு நாம் இனி நடக்க வேண்டியதைப் பற்றி ஆலோசிக்கலாம்'' என்றான்.

மாலை சுமார் ஏழுமணியிருக்கும். அச்சமயம் ஏழுமலை சிறைச்சாலை வீதியிலிருக்கும் தஞ்சாவூர் ஹோட்டலுக்கு வந்தான். அவன் அங்குப் பன்முறை வந்திருப்பதால் அந்த ஹோட்டலின் அமைப்பும், அதன் முதலாளியின் விஷயங்களும், அங்கு நடக்கும் விஷயங்களும் யாவும் அவனுக்கு நன்குகத்தெரியும். அந்த ஹோட்டல்காரன் சுமார் பதினைந்து வருடங்களாக அங்கு ஹோட்டல் வைத்துக் கொண்டிருக்கிறான். சிறைச்சாலைக்காவலர்களில் ஒரு உத்தியோகஸ்தனைக் கைவசப்படுத்திக் கொண்டு, அந்தச்சிறைச் சாலையில் திடீலென்று கொண்டுவரப்பட்டு விசாரணை முதலிய விவகாரங்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு ஆகாரம் கொடுத்தனுப்பும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறான். அதில் அவனுக்கு நல்ல வரும்படியுண்டு. எப்படியெனில் சிறைப்பட்ட ஆட்களுக்கு வெளியிலிருந்து எந்தச் சங்கதியும் போகப்படாது, ஒருவரும் கடிதம் எழுதியனுப்பலாகாது, என்பது கண்டிப்பான சிறைச்சாலை வீதி; ஆனால் எவரேனும் தஞ்சாவூர் ஹோட்டல் முதலாளியாகிய இரங்கராவிடம் தங்கள் நிலைமைக்குத் தக்கபடி பணமளித்து விட்டால் கடிதமோ எதுவோ,

எதுவாயினும் சரி, தான் அனுப்பும் சாப்பாட்டோடு சிறையாளர்க்குப் போய்ச் சேரும்படி செய்துவிடுவான், இவனுடைய நடக்கையை யொருவாறு ஜாடையாகக் கூறி விட்டோம் இனி நமது கதையைத் தொடங்குவோம்.

ஏழுமலை இரவு ஏழுமணிக்கு ஹோட்டலுக்குச் சென்றதும், அதன் அமைப்புமுழுமையும் அவனுக்கு நன்றாகத் தெரிந்திருப்பதால் நேராய் இரங்கராவின் இரகசிய அறைக்குச்சென்று வெளியிலிருந்த ஆளிடம், "வீரப்பன் புத்திரர் ஏதோமுக்கிய வேலையாய் உம்மைப்பார்க்க வந்திருக்கிறார் என்று உன் எஜமானிடம் கூறு" என்றான்.

இரண்டொரு நிமிடங்களில் இரங்கராவும் ஏழுமலையும் ஒருதனி யறையில் சந்தித்தார்கள். ஏழுமலை தன் தந்தை யளித்த கடிதத்தை யெடுத்து அவனிடமளித்தான். இரங்கராவ் அதைக் கண்டதும் ஏழுமலையை நோக்கி "தம்பி! இச்சங்கதி யெல்லாம் எனக்கு இன்று தான் தெரியவந்தது. சிறைச்சாலை யுத்தியோகஸ்தர்களில் ஒருவன் வந்து "திடீலென்று இரண்டு ஆட்கள் சிறைச்சாலையில் வந்திருக்கிறார்கள். அவர்களுக்குச் சாப்பாடளிக்கவேண்டுமென்று கூறினான். அவ்வாறே யனுப்பிவருகிறோம். இனி இதைப் பற்றி யேதேனும் பேசவேண்டியதாயின், உன் தந்தையை நேரில் வரும்படி கூறுவதுதான் தகுதி" என்றான்.

ஏழுமலை ஹோட்டல்காரனுக்கு வந்தனமளித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுத் தன் தந்தையிடம் சென்று நடந்த சங்கதி யாவும் ஒன்று விடாமற் கூறினான்.

அதே யிரவு சுமார் பதினோரு மணி யிருக்கும். அச்சமயம் ஏழுமலையின் தந்தையாகிய வீரப்பன் தஞ்சாவூர் ஹோட்டலுக்குச் சென்று அதன் சொந்தக்காரனாகிய இரங்கராவைக் கண்டு பேசினான். வீரப்பன் இரங்கராவை நோக்கி "நண்பனே! நாம் நெடு நாளைய சிநேகிதர்கள்.

நாம் இருவரும் தனித்தும், இன்னும் இரண்டொருவரைச் சேர்ந்தும் இரண்டொரு காரியங்களைச் செய்துமிருக்கிறோம். இப்போது நமது நண்பர்களைச் சேர்ந்த கேசவனும் அவன் மகனும் போனிலிருந்து வெளி வந்தவர்கள் எப்படியோ மறுபடி சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு-முக்கியமாக எனக்குச் சங்கதியனுப்ப அவர்களுக்குச் சமயம் வாய்க்கவில்லை. நான் தற்செயலாக நமது நண்பன் ஒருவனால் அதை யறிந்தேன். இப்போது நாம் அவர்களுக்கு எவ்விதமேனும் உதவி செய்யவேண்டும். இதில் இன்னொரு முக்கிய விஷயம். அப்பாங்கி கணக்கில் எனக்கு இன்னம் சரியான பாகம் சேரவில்லை. அது எங்கோ புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் வெளியில் வந்தால்தான் நான் அதில் எனக்குச் சேரவேண்டியதைப் பெறலாகும். ஆகையால் இவ்விஷயத்தில் நீ யுதவிசெய்தே தீரவேண்டும். உன் அபிப்பிராயம் என்ன?'' என்றான்.

இரங்கராவ்:—'' நண்பரே ! நான் இதில் என்னாலான உதவியைச் செய்யவேண்டியவனே. செய்யச் சித்தமாகவே யிருக்கிறேன். ஆயினும் ஒரு காரணத்திற்காக நான் மிக்க ஜாக்கிரதையோடும் அளவோடுமே வேலை செய்யவேண்டும். ஏனெனில் இப்போது நான் சிறைச்சாலையிலிருக்கும் கைதிகளுக்கு ஆகாரமனுப்பும் சந்தர்ப்பம் இருப்பதால் தான் நமது காரியங்களில் சமயோசிதப்படி உதவி செய்ய அனுகூலம் கிடைக்கிறது. நான் சற்று அளவுமீறி நடந்து கொண்டால் எனக்குக் கெடுதியுண்டாவதோடு நமக்கிருக்கும் இந்த அனுகூலமே யடியோடு போய்விடும். ஆகையால் இதற்கு ஊனம் வராதபடி நீ எத்தகைய காரியத்தைச் செய்யும்படி கூறினும் நான் செய்ய ஆயத்தமா

யிருக்கிறேன். இனி நீ என்னை யென்ன செய்யச் சொல்கிருயோ அதைக்கூறு" என்ருன்.

அதன்பிறகு இரங்கராவும் வீரப்பனும் மிக்க ஆலோசனையோடும் தந்திர சாமார்த்தியத்தோடும் ஒருமணி நேரத்திற்குமேல் பேசினர்கள். கடைசியில் தாங்கள் செய்யவேண்டிய ஏற்பாட்டைப்பற்றி ஒரு முடிவிற்கு வந்ததும், வீரப்பன் "சரி, நான் நாளைக்கே ஏழுமலையை நமது ஆலோசனைப்படி தக்கவிதமாய் உன்னிடம் அனுப்பி விடுகிறேன். மேல் நடக்கும் சங்கதிகள் உடனுக்குடன் எனக்கு அறிவிக்கப் படட்டும்." என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்ருன்.

மறுநாள் மாலை ஆறுமணிக்கு கப்பலில் வேலைசெய்யும் மாலுமியைப்போல் உடையணிந்த ஒருவாலிபன் தஞ்சாவூர் ஹோட்டலுக்கு வந்து அதன் முதலாளியைக்காண வேண்டுமென்று வேலையாளினிடம் கூறினன். இரண்டொருவிநாடிகளுக்குள் அவ்வாலிபனும் ஹோட்டல்சொந்தக்காரனுகிய இரங்கராவும் தனியாக அறையிற் சந்தித்தார்கள். இரங்கராவ், வாலிபனை நோக்கி எங்கேகடிதம் என்றதே, வாலிபன் தன் ஜேபியிலிருந்த கடிதத்தை யெடுத்து அவனிடமளித்தான்.

இரங்கராவ் கடிதத்தை வாங்கிப்பார்த்ததும் புன்னகையோடு, "சரி நீ இது முதல் என்ஹோட்டலில் வேலைக்கமர்ந்திரு. சிறைச்சாலையில் புதிதாக வந்திருப்பவர்களுக்குப் போசனம் கொண்டுபோக வேண்டும். மற்ற சங்கதி யுனக்குத் தெரிந்தது. நீ செய்துகொள்ள வேண்டியது" என்ருன்.

இப்போது ஹோட்டலில் வந்து வேலைக்காரனுக அமர்ந்தவன் வீரப்பனுடைய புத்திரனுகிய ஏழுமலையே. அவன் மிக்க தந்திர சாமார்த்திய முடையவனென்று முன்னம் கூறி யிருக்கிறேம். இப்போதவன் தன் மீசையைக் களைந்துவிட்டுக் கள்ளச்சிகை வைத்துக் கொண்டு சுமார் நாற்பது வயதுடைய ஒரு நொண்டியைப் போல் மாறு வேடமணிந்திருக்கிருன். அவன் முகத்தின் வலது

18519

பக்கம் வீழ்ந்து அடிபட்டது போன்ற வடுக்கள் இருக்கின்றன. இவை யாவும் பொய் வேடமே. இரங்கராவுக்கு மட்டுமே யது தெரியும். அவன் இக்கள்ளருக்கு உள் உளவாக இருப்பவன் என்று முன்னமே கூறி யிருக்கிறோம்.

---

## 25—வது அத்தியாயம்.

முன் அத்தியாயத்தில் கண்ட சம்பவங்கள் நடந்த மறு நாள் காலை சுமார் பத்துமணி யிருக்கும். ஹோட்டல்காரனுகிய இரங்கராவ் சமையலறையில் காலைப் போசனம் ஆயத்தமாய் விட்டதாவென்று கவனித்துக் கொண்டிருக்கிறான். அச்சமயம் ஒரு வேலையாள் அவனருகில் ஓடிவந்து "ஐயா! சிறைச் சாலையிலிருந்து சாப்பாட்டிற்காக ஒரு உத்தியோகஸ்தர் வந்திருக்கிறார். உங்களைக் கூப்பிடுகிறார்" என்றான்.

ஹோட்டல்காரன் துரிதமாகச் சமையலறையை விட்டு சிறைச்சாலை யுத்தியோகஸ்தினிருக்கு மிடத்திற்கு வந்து அவனைக் கண்டு வந்தன மளித்தான். உத்தியோகஸ்தன் "என்ன அய்யா! சிறைச்சாலைக் கவர்னர் சாதாரணமாய் இதுகாறும் சிறையாளர்க்குச் சாப்பாடு தயார் செய்ய ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் ஆளிடமே இவர்களுக்கும் ஏற்பாடு செய் என்றார். நான் உனக்கு மெதுவாய் அந்த வேலையில் இடந் தரக்கருதி 'இவர்கள் கொஞ்சகாலமே யிங்கிருந்து பிறகு மாகாண சிறைச்சாலைக்கு அனுப்பப்பட வேண்டியவர்களானபடியால் இவர்களிருவர்க்கு மட்டுமே இதே வீதியிலுள்ள ஹோட்டலில் ஏற்பாடு செய்துவிட்டேன்' என்று கூறிவிட்டேன். அவர் சில விஷயங்களில் என்னிடம் பந்தப்பட்டிருக்கிறாராதலின் பேசாமலிருந்து விட்டார். இதோ மற்ற பேர்க்கெல்லாம் ஆகாரம் வந்து கொண்டிருக்கிறது. நீ யனுப்பவேண்டிய இந்த இரண்டு பேருக்குஞ் சாப்பாடும் இன்னும் வரவில்லை. மணி பத்தரையாய் விட்டது" என்றான்.

புதிய நாவல் பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

(2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்த விலை ரூ. 2—0—0.

---

# அமராவதி 2-பாகம்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இந்திராபாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற திருடன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணாராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# ஆனந்தபோதினி

## (இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000-இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொரு வருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனாமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0.

பினாங், சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0

வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

---

Printed at the "Ananda Bodhini" Press, Madras.